Registered as a Newspaper

பக்கங்கள் - 16+8


விலை - ரூபா 60

# உதயன்

சுடர் : 39
கதிர் : 356

ஞாயிற்றுக்கிழமை
17 நவம்பர் 2024

முச்சந்தி முரளி



"வெண்ட சந்தோசத்தில இப்பிடிச் சொல்லுறதோட நிக்காமல் செய்தும் காட்டினா நல்லது கண்டியளோ"



# தமிழருக்குத் தீர்வு வழங்கும்வரை மாகாணசபை முறை நீக்கப்படாது

## வடக்கின் நம்பிக்கையைக் காப்போம் ரில்வின் சில்வா நேற்றுத் தெரிவிப்பு

**கொழும்பு, நவம்பர் 17**

**தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வுப் பொறிமுறையை முன்வைக்கும்வரை மாகாணசபை முறைமை இல்லாதொழிக்கப்படமாட்டாது. வடக்கு மக்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையை நிச்சயம் பாதுகாப்போம் - என்று தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரான ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.**

15

## நாடாளுமன்றத்தில் 176 புதுமுகங்கள்

கொழும்பு, நவ. 17

நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளோரில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைக்கு மேல் புதுமுக நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ளனர். இதன்படி, 225 பேரில் 176 பேர் புதுமுக நாடாளு

15

## நவம்பர் 21ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்!

கொழும்பு, நவ. 17

பத்தாவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலாவது நாளில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக விசேடமான ஆசன ஒதுக்கீடுகள் எதுவும் காணப்படாது என்பதுடன் விரும்பிய ஆசனத்தில் அமரமுடியும்.

15

## எம்.பி.க்கள் பெயர்களை உள்ளடக்கி வர்த்தமானி!

கொழும்பு, நவ. 17

நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களை உள்ளடக்கிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

10ஆவது நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள 196 நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களைக் கொண்ட விசேட

14

## தேசியப் பட்டியலை வைத்து சுமந்திரன் எம்.பி.யாகக் கூடாது

### நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சரவணபவன் நேற்று விளாசல்



யாழ்ப்பாணம், நவ. 17

தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் ஆசனத்தைப் பயன்படுத்தி சுமந்திரன் நாடாளுமன்ற உறுப்பினராகக் கூடாது. மாறாக அவர் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் சென்றால் அது மக்களை முட்டாள்களாக்கும் செயல் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சரவணபவன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்

15



## 22ஆம் திகதி வரை வடக்கில் கனமழை!

கொழும்பு, நவ. 17

வடக்கு - கிழக்கு மாகாணத்தில், எதிர்வரும் 22 ஆம் திகதிவரை கனமழையுடனான காலநிலை காணப்படும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும், வானிலையாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: இலங்கைக்குத்

15

## தமிழ்த் தேசியத்தை விட்டு எம் மக்கள் விலகவில்லை

### வாக்குவங்கி வீழ்ச்சி ஏமாற்றமே கஜேந்திரகுமார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 17

தமிழ்மக்கள் தமிழ்த்தேசியத்தை விட்டு விலகியதாகவோ, தமிழ்த்தேசியத்தை நிராகரிக்கின்ற தேசிய மக்கள் சக்திக்குப் பெருமளவு வாக்குகளை அளித்துள்ளதாகவோ கூறப்படும் கருத்துகளை நாங்கள் நிராகரிக்கின்றோம் எனத் தமிழ்த்தேசியமக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளவருமான கஜேந்திர

11

சபாநாயகர் பிமல்

விரிவு :- பக். 07

## திடீர் சுகவீனமுற்று கைதியொருவர் பலி

வவுனியா, நவ. 17

வவுனியா சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த கைதியொருவர், கடந்த ஒருவாரமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சையின் போது உயிரிழந்துள்ளார்.

மனுவேல்பிள்ளை சஞ்சீவ் பிரதீபன் (வயது-45) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

முள்ளியவளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, ஒக்ரோபர் மாதம் 16ஆம் திகதி

14

### அநுர அரசாங்கத்தின்

## கொள்கை பிரகடனம் நவம்பர் 21

கொழும்பு, நவ. 17

நவம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெறவிருக்கும் 10ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வை வைபவ

14

சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களுடைய புதிய அரசியல் பிரவேசத்தை மனித உரிமைகள் பேரவையில் வெளிப்படுத்துக

சட்டத்தரணி பிரதீபா மஹாநாம தெரிவிப்பு

**கொழும்பு, நவ. 17**


**தமிழர்கள் புதிய அரசியல் கட்டமைப்புக்குள் பிரவேசித்துள்ளார்கள் என்ற செய்தியை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அமர்வின்போது அரசாங்கம் சர்வதேசத்துக்குச் சொல்லவேண்டும் என்று சட்டத்தரணி பிரதீபா மஹாநாம தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுத்தேர்தலில் ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி எவ்விதமான அரசியல் கூட்டணியும் இல்லாமல் 21 தேர்தல் மாவட்டங்களிலும் அமோக வெற்றி பெற்றுள்ளமை விசேட அம்சமாகும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் மக்கள் பாரம்பரியமான அரசியல் கலாசாரத்தில் இருந்து விலகி புதிய அரசியல் கலாசாரத்துக்குள் பிரவேசித்துள்ளார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் பொது அரசியல் கட்டமைப்பில் இருந்து புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவே கடந்த காலங்களில் சர்வதேச மட்டத்திலும், சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் தொடர்ச்சியாகக் குறிப்பிட்டது. இந்த விடயங்களை முன்னிலைப்படுத்தி இலங்கைக்கு எதிரான பிரேரணைகளும் முன்வைக்கப்பட்டன. ஆனால், வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள், குறிப்பாக தமிழ் மக்கள் ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள். ஆகவே, பொது அரசியல் கட்டமைப்பில் இருந்து தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள் என்று இனி ஜெனிவாவில் குற்றச்சாட்டுகளை முன்வைக்க முடியாது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கூட்டத்தொடர் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ளது. இதன்போது தமிழ் மக்கள் புதிய அரசியல் கட்டமைப்புக்குள் பிரவேசித்துள்ளார்கள், பழைய பாரம்பரியமான அரசியல் கட்டமைப்பை புறக்கணித்துள்ளார்கள் என்ற செய்தியை அரசாங்கம் சர்வதேச அரங்கில் எடுத்துரைக்க வேண்டும் - என்றார். (ம)



நாடாளுமன்றப் பதவிகள்

## போட்டியின்றித் தெரிவாகும் பிரதமராக ஹரிணி நீடிப்பு

கொழும்பு, நவ. 17

தேசிய மக்கள் சக்தி மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்துக்கு மேல் அதிகாரத்தைப் பெற்றுள்ளதால் நாடாளுமன்ற பதவிகளுக்குப் போட்டியின்றி ஏகமனதாக நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர். பிரதமர் பதவியிலும் மாற்றம் வராது. கலாநிதி ஹரிணி அமரசூரிய அந்தப் பதவியில் நீடிக்கவுள்ளார்.

நாடாளுமன்றம் எதிர்வரும் 21 ஆம் திகதி கூடவுள்ள நிலையில், சபாநாயகர், பிரதி சபாநாயகர், குழுக்களின் பிரதி தவிசாளர், சபை முதல்வர் மற்றும் ஆளுங்கட்சி பிரதம கொறடா ஆகிய பதவிகள் தொடர்பில் தேசிய மக்கள் சக்தி அடுத்த ஓரிரு நாள்களில் இறுதி முடிவை எடுக்கவுள்ளது.

நாடாளுமன்றம் கூடிய பின்னர் முதல் நடவடிக்கையாக நாடாளுமன்ற உறுப்பினர்களின் உறுதியேற்பு நடைபெறும். அதன் பின்னர் சபாநாயகர், பிரதி சபாநாயகர் மற்றும் குழுக்களின் தவிசாளர் ஆகிய பதவிகளுக்குரிய தேர்வு நடைபெறும்.

அதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் சஜித் பிரேமதாஸ நீடிக்கவுள்ளார். (ச-44)

## புதிய எம்.பி.களுக்கு வழிகாட்டல் செயலமர்வு

கொழும்பு, நவ.17

10 ஆவது நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதன்படி இன்று முதல் இணைய வழி முறைமை ஊடாக புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தம்மை பதிவுசெய்து கொள்ளலாம் என நாடாளுமன்ற தொடர்பாடல் பிரிவு தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்குத் தேவையான தகவல்களை அறிந்து கொள்வதற்காக எதிர்வரும் 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் இரண்டு தகவல் சாளரங்களைத் திறப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நாடாளுமன்ற மரபு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் தொடர்பில் 3 நாள் செயலமர்வு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. 25, 26, 27 ஆகிய திகதிகளில் செயலமர்வு நடைபெறவுள்ளது.

புதிய நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு எதிர்வரும் 21 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு கூடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## தமிழரசுக்கட்சி செயலாளர் சத்தியலிங்கம் பின்னடைவு

வவுனியா, நவ.17

தமிழரசுக்கட்சியின் பதில் செயலாளர் ப.சத்தியலிங்கம் இம்முறை தேர்தலில் பெரும் பின்னடைவை சந்தித்துள்ளார். விருப்பு வாக்கின் அடிப்படையில் அவர் ஐந்தாம் இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் தனித்துப் போட்டியிட்ட தமிழரசுக்கட்சி ஓர் ஆசனத்தைப் பெற்றுக் கொண்டது. அந்தக் கட்சியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் சார்பாகப் போட்டியிட்ட து.ரவிகரன் 11 ஆயிரத்து 215 வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றார்.

தமிழரசுக்கட்சியின் சார்பில் போட்டியிட்ட கட்சியின் செயலாளர் ப.சத்தியலிங்கம் வெறும் 4 ஆயிரத்து 33 வாக்குகளைப் பெற்று விருப்பு வாக்கின் அடிப்படையில் 5 ஆம் இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார். (ரி-110)

## அரசியல் ஓய்வு வெகுதூரம்

மஹிந்த தெரிவிப்பு



கொழும்பு, நவ.17

அரசியலில் இருந்து அவ்வளவு இலகுவில் ஓய்வுபெறப் போவதில்லை. ஜனநாயக வழியில் ஆட்சியைப் பிடிப்பதற்குரிய சமரையும் கைவிடப்போவதில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

மொட்டுக்கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற விசேட கூட்டத்தின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

பொதுத்தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையை ஏற்கின்றோம். ஸ்ரீலங்காப் பொதுஜன பெரமுனக் கட்சிக்கு எதிர்பார்த்த பெறுபேறு கிட்டியுள்ளது.

புதியவர்களுக்கு இடமளிக்கவேண்டும். அந்தவகையில் தேசிய மக்கள் சக்தியின் வெற்றி மகிழ்ச்சியளிக்கின்றது. நாடு முன்னேறலாம், இல்லையேல் வீழ்ச்சியடையலாம். மீண்டெழுவதற்குரிய பேச்சுக்களை நாம் ஆரம்பித்துள்ளோம் எனவும் மஹிந்த ராஜபக்ச குறிப்பிட்டார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் முடிவு வைகோ அதிர்ச்சி

கொழும்பு, நவ.17

அண்டை நாடான இலங்கையின் தேர்தல் முடிவுகள் குறித்து தமிழகத்தின் மறுமலர்ச்சிதிராவிடமுன்னேற்றக்கழக நிறுவுநர் வை.கோபாலசாமி தமது அதிர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார் என்று இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் தமிழர் பிரச்சினைக்கு இதுவரை தீர்வு காணப்படவில்லை. அண்டை நாட்டில் உள்ள தமிழர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த இந்தியா மற்றும் புலம்பெயர் தமிழர்கள் ஒற்றுமையாக இருக்கவேண்டும்.

அநுரகுமார திஸாநாயக்க தொடர்ந்து தமிழர்களுக்கு எதிராகக் குரல் எழுப்பி வந்தவரே. தேசிய மக்கள் சக்தி என்பது ஜனதா விமுக்தி பெரமுனவின் மற்றொரு பதிப்பு மட்டுமே என்றும் வைகோ குறிப்பிட்டுள்ளதாக இந்திய ஊடகம் தெரிவித்துள்ளது. (ச-இ)

# சட்டவிரோத மணலகழ்வுக்கு துணைபோகும் பொலிஸார்

## கிளிநொச்சி மக்கள் வேதனை



**கிளிநொச்சி, நவ.17**

**கிளிநொச்சியில் சட்டவிரோதமாக தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் மணலகழ்வை நிறுத்துவதற்கு அதிகாரிகளால் நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

இதுதொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்; கிளிநொச்சியின் பல பகுதிகளிலும் தொடர்ச்சியாகச் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது. இதனால் பெறுமதியான வயல் நிலங்கள், தனியார் காணிகள் என்பன பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

சட்டவிரோத மணலகழ்வில் ஈடுபடுகின்றவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே நெருங்கிய உறவு இருப்பதனால் அவர்கள் மீது பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லை.

எனவே சூழலுக்கு ஏற்படுகின்ற பாதிப்பைத் தடுக்கவும், விவசாய நிலங்களைப் பாதுகாக்கவும் சட்டவிரோத மணல் அகழ்வோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் முன்வரவேண்டும்- என்றனர் .

(ச-ரி-22-214-113)

# மக்கள் தீர்ப்பை ஏற்கின்றேன்!

## அங்கஜன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 17

நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட மக்கள் வழங்கியுள்ள தீர்ப்பை ஏற்றுக்கொள்வதோடு நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ள உறுப்பினர்களுக்கு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார். கடந்த காலங்களில் நாம் மக்களுக்காக பொறுப்பெடுத்து மேற்கொண்ட பொறுப்புகளை மக்கள் எம்மிடமிருந்து எடுத்து புதியவர்களின் கைகளுக்குக் கொடுத்துள்ளனர். இந்த முடிவை வழங்கிய மக்களிடம் நாம் எவ்வித வெறுப்புகளும் கொள்ளப் போவதில்லை. பல்வேறு தேவைகளோடு வாழும் மக்கள் அவற்றைத் தீர்ப்பதற்கான வழியை புதிதான முறையில் தேர்ந்தெடுத்த ஒரு தீர்மானமாகவே கருதுகிறோம். அதேநேரத்தில் மக்களுக்கு என்னால் ஆற்றக்கூடிய சேவைகளை அங்கஜன் இராமநாதன் என்ற தனிநபராகத் தொடர்ந்தும் மேற்கொள்வேன்.

தோல்விகளைச் சந்திக்காதவர்கள் ஒருபோதும் வெற்றியாளராவதில்லை.

அதேநேரத்தில் தோற்றாலும் விட்டுச் செல்வதுமில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-10)

# போதைமாத்திரைகளுடன் 18 பொதிகள் கைப்பற்றல்

கொழும்பு, நவ.17


புத்தளம், கற்பிட்டி, முசல்பிட்டி பிரதேசத்தில் 4 லட்சத்து 42 ஆயிரத்து 680 போதை மாத்திரைகள் அடங்கிய 18 பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக கற்பிட்டிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கற்பிட்டிப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே அவை கைப்பற்றப்பட்டுள்ளன. (ச-இ)



# 'குடு லொக்கா' போதையுடன் கைதானார்


பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரான 'குடு லொக்கா' என்பவர்ஹெரோய்ன்போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக மடாட்டுகம பொலிஸார் தெரிவித்துள்ளனர். மடாட்டுகம பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடமிருந்து 3ஆயிரத்து 220 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. (ச-இ)



# சாவ. மருத்துவமனைக்கு உபகரணங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், நவ.17

சாவகச்சேரி கற்குளி வீதியைச் சேர்ந்த அமரர் வசந்தநாயகி இராஜசிங்கரியின் நினைவாக மகாதேவா குடும்பத்தினரால் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் குருதி சுத்திகரிப்புப் பிரிவுக்கு நோயாளர் கட்டில், சக்கரநாற்காலி, காற்று மெத்தை என்பன மருத்துவமனை நிர்வாகத்தினரிடம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கையளிக்கப்பட்டன. (ச-45-9)



# கசிப்புக் காய்ச்சுமிடம் பொன்னாலையில் முற்றுகை!

## இளைஞன் கைது

யாழ்ப்பாணம், நவ,17

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொன்னாலை தெற்கு, நெல்லியான் பிரதேசத்திலுள்ள கசிப்புக் காய்ச்சும் இடமொன்று வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் நேற்றுச் சனிக்கிழமை சுற்றி வளைக்கப்பட்டது. இதன்போது 166 லீற்றர் கோடா, 10.5 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்திய இரண்டு பெரிய கொள்கலன்கள், இரண்டு சிறிய கொள்கலன்கள், இரண்டு செப்பு சுருள் என்பவற்றுடன் 21 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி சி.ஐ.கொஸ்தா தெரிவித்துள்ளார். (ச-25, 27)

## காலி துறைமுகத்தில்

# 6 கிலோ ஹெரோய்னுடன் 6 சந்தேகநபர்கள் கைது!



காலி துறைமுகத்தில் மீன்பிடி இழுவை படகொன்றில் உயிர்கொல்லி போதைப்பொருள் அடங்கிய ஹெரோய்ன் பொதிகளுடன் 6 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இலங்கைக் கடற்படைக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் காலி துறை முகத்தில் கடற்படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களிடமிருந்து 6 சாக்குகளில் 6 கிலோ 840 கிராம் எடை கொண்ட 60 ஹெரோய்ன் பொதிகள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன. அவற்றின் மொத்தப் பெறுமதி ஆயிரத்து 650 மில்லியன் ரூபா என்று தெரிவிக்கப்படுகிறது. சந்தேகநபர்கள் 18 முதல் 34 வயதுக்குட்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களை சட்டநடவடிக்கைக்குட்படுத்த பொலிஸ் போதைப்பொருள் பணியகத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். (ச-25, 213)

# ஹாட்லி மைந்தர்களின் நினைவேந்தல் நிகழ்வு

ஹாட்லியின் மைந்தர்களது 25ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வடமராட்சி இன்பர்சிட்டி கடற்கரையில் அவர்களது குடும்பத்தவர் மற்றும் நண்பர்களால் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு அனுஷ்டிக்கபடவுள்ளது. ஹாட்லி கல்லூரியின் 2000 ஆம் ஆண்டு உயர்தர வகுப்பு மாணவர்கள் நால்வர் கல்வி செயற்பாட்டின் நிமித்தம் வடமராட்சி இன்பர்சிட்டி கடற் பகுதியில் 1999 ஆம் ஆண்டுநவம்பர் 17 ஆம் திகதி, கடல்வள ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தவேளை கடல் அலையில் சிக்குண்டு உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஈ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தின் மகத்தான வெற்றி மக்களின் ஆழ்மன வெளிப்பாடே!



## எரிக்சொல்ஹெய்ம் சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ.17

இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் அரசாங்கத்துக்குக் கிடைத்துள்ள மகத்தான பெரும் வெற்றி ஆழமான சீர்திருத்தங்களுக்கான ஆணையை வழங்குகின்றது என இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகப்பதிவில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அநுரகுமார திஸாநாயக்க அநேகமாக அனைத்துத் தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளார். இது இலங்கைக்கு என்ன தேவையோ அதனைச் செய்வதற்கான வலுவான வாக்குறுதியை வழங்குகின்றது.

நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக சர்வதேச நாணயநிதியத்துடன் ஒரு சிறந்த ஒப்பந்தத்துக்கான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளல், பொருளாதார வளர்ச்சி மற்றும் வறுமையில் சிக்கியுள்ளவர்களை அதன் பிடியிலிருந்து மீட்பதற்கான பொருளாதார சீர்திருத்தம், தேசிய நல்லிணக்கம் சிறுபான்மை தமிழர்கள், முஸ்லிம்களுக்கான உரிமைகள். ஊழலுக்கு எதிராக கடுமையான போராட்டம், சுற்றுலாத்துறை, பசுமை பொருளாதாரத்தை உருவாக்குதல், சதுப்பு நிலங்கள், வனங்கள், வலுசக்தி என போன்றவற்றுக்கான ஆழமான ஆணையை மக்கள் அளித்துள்ளனர்- என்றார். (ச-இ)



## இயம சங்காரம்

வரலாற்றுச் சிறப்பு மிக்க கீரிமலை நகுலாம்பிகா தேவி சமேத நகுலேஸ்வரர் ஆலய இயம சங்கார உற்சவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ச-25,66)





## ஹாட்லிக் கல்லூரியில் குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம், நவ.17

ஹாட்லியின் மைந்தர்களது 25 மற்றும் 20 ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு ஹாட்லியின் மைந்தர்கள் நிதியத்தின் ஏற்பாட்டில், பருத்தித்துறை ஆதார மருத்துவமனை இரத்த வங்கி பிரிவினரது அனுசரணையில் குருதிக்கொடை முகாம் ஹாட்லிக் கல்லூரியின் மாநாட்டு மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை காலை 9மணிக்கு ஆரம்பமாகி மதியம் 2மணிவரை இடம்பெறவுள்ளது.

குருதிக்கொடை முகாமில் ஆர்வமுள்ள தன்னார்வ குருதிக்கொடையாளர்கள் பங்கேற்று குருதிக் கொடை வழங்க முன்வருமாறும், தொடர்புகளுக்கு 077312 2198 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது. (ரி-100)

## மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற முயற்சிப்பேன்

### காதர் மஸ்தான் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 17

மக்கள் எதிர்பார்க்கும் தேவைகளை நிச்சயம் அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொடுப்பேன் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொழிலாளர் கட்சியில் வன்னித் தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பின் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய கட்சியில் போட்டியிட்டு நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்றுள்ளேன். எமது புதிய சின்னத்தை மக்கள் மத்தியில் கொண்டு சென்றவர்களுக்கும், அதனை ஏற்றுக் கொண்டு வாக்களித்த வன்னி மாவட்ட மக்களுக்கும் எனது நன்றிகள். மக்கள் எதிர்பார்க்கும் தேவைகளை இந்த அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக் கொடுக்க என்னால் முடிந்த முயற்சிகளை எடுப்பேன். இந்த அரசாங்கம் எடுக்கும் மக்கள் நலன் சார்ந்த திட்டங்களுக்கும் எனது முழு ஆதரவையும் வழங்குவேன் - என்றார். (ச-இ)

## மலையகப் பிரதிநிதித்துவத்தை தேசியப்பட்டியலில் உள்ளீர்க்க

### தமிழரசுக்கட்சி உறுப்பினர் எம்.பி.நடராஜா வேண்டுகோள்

வவுனியா,நவ.17

தமிழரசுக்கட்சிக்கு கிடைத்துள்ள தேசியபட்டியல் ஆசனத்தை வடக்கில் உள்ள வடக்கில் வாழும் மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தி எனக்கு வழங்க வேண்டும் என்று வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.பி.நடராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் தமிழரசுக்கட்சியின் செயலாளருக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:-

எம்.பி. நடராஜா ஆகிய நான் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் அங்கத்துவம் பெற்ற உறுப்பினர்.

1995 ஆம் ஆண்டு தொடக்கம் இந்தக் கட்சியுடன் இணைந்து பயணித்துள்ளேன். 2005 இல் கட்சியின் வவுனியா மாவட்ட கிளையின் செயலாளராகவும் கடமையாற்றினேன். 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற வடமாகாண சபைத் தேர்தலில் எமது கட்சியில் போட்டியிட்டு 10,800 வாக்குகளைப் பெற்றதுடன் சுழற்சி முறையில் வட மாகாண சபையின் உறுப்பினராகவும் கடமையாற்றினேன்.

வடக்கில் வாழ்கின்ற சுமார் 2 இலட்சம் மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு ஒரு நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் தேவை. வடக்கில் வாழ்கின்ற மலையக மக்கள் சார்பாக எனக்கு வழங்கவேண்டும் என்றுள்ளார். (ச-25, 110,18)



## தே. ம. சக்தி வெற்றிக்கு மன்னாரில் பொங்கல்

மன்னார்,நவ. 17

மன்னார் மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றதையிட்டு நேற்று சனிக்கிழமை நானாட்டான் பிரதேசத்தில் பொங்கல் பொங்கிக் கொண்டாடினர்.

இந்த வெற்றிக்காக உழைத்து எங்களோடு சேர்ந்து பயணித்தவர்களுக்கும் வாக்குகளை வழங்கிய இந்தப் பிரதேச மக்களுக்கும் நன்றி செலுத்தும் முகமாகவே பொங்கல் பொங்கி கொண்டாடப்படுவதாக தேசிய மக்கள் சக்தியின் மன்னார் மாவட்ட நிறைவேற்றுக் குழு உறுப்பினர் மொஹமட் சாஜித் தெரிவித்துள்ளார். (ச-60)

## சுன்னாகத்தில் திருவாசக முற்றோதல்


யாழ்ப்பாணம், நவ.17

சுன்னாகம் வாழ்வக நிறுவனத்தின் ஏற்பாட்டில் வருடாந்த திருவாசக முற்றோதல் நிகழ்வு சுன்னாகத்தில் அமைந்துள்ள வாழ்வக நிறுவனத்தில் மூத்த ஓதுவார் இ.சரவணபவன் தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பி.ப 1.30 மணி வரை நடைபெறவுள்ளது. (ரி-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கு மாகாணத்தில் 7,49,762 பேர் வாக்களிக்கவில்லை

## 94,489 வாக்குகள் நிராகரிப்பு



**யாழ்ப்பாணம், நவ. 17**

**நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் 22 லட்சத்து 20 ஆயிரத்து 311 வாக்காளர்களைக் கொண்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 14 லட்சத்து 70 ஆயிரத்து 549 பேர் வாக்களித்த நிலையில் 7,49,762 பேர் வாக்களிக்காததுடன் 94,489 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.**

வடக்கு மாகாணத்தில் யாழ்.-கிளிநொச்சி தேர்தல் மாவட்டம் 5,93,187 வாக்காளர்களை கொண்டுள்ள நிலையில் நடந்து முடிந்த தேர்தலில் 3,58,079 பேர் வாக்களித்த நிலையில் 2,35,108 பேர் வாக்களிக்கவில்லை. அதேநேரம் வாக்களித்த 3,58,079 பேரில் 32,767 பேரின் வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய 3,25,312 பேரின் வாக்குகளே செல்லுபடியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று வன்னி மாவட்டம் 3,06,081 வாக்காளர்களை கொண்டுள்ள நிலையில் 2,11,140 பேர் வாக்களித்த அதே நேரம் 94,941 பேர் வாக்களிக்கவில்லை. வாக்களித்த 2,11,140 பேரில் 15,254 பேரின் வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன .இதற்கமைய 1,95,886 பேரின் வாக்குகளே செல்லுபடியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் 3,30,049 பேர் வாக்களிக்காத நிலையில் 48,021 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு தேர்தல் மாவட்டம் 4,49,686 வாக்காளர்களை கொண்டுள்ள நிலையில் நடந்து முடிந்த தேர்தலில் 3,02,382 பேர் வாக்களித்த நிலையில் 1,47,304 பேர் வாக்களிக்கவில்லை. அதேநேரம் வாக்களித்த 3,02,382 பேரில் 15,329 பேரின் வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய 2,87,053 பேரின் வாக்குகளே செல்லுபடியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று திருகோணமலை மாவட்டம் 3,15,925 வாக்காளர்களை கொண்டுள்ள நிலையில் நடந்து முடிந்த தேர்தலில் 2,18,425 பேர் வாக்களித்த அதேநேரம் 97,500 பேர் வாக்களிக்கவில்லை. வாக்களித்த 2,18,425 பேரில் 13,537 பேரின் வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன .

இதற்கமைய 2,04,888பேரின் வாக்குகளே செல்லுபடியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று திகாமடுல்ல மாவட்டம் (அம்பாறை ) 5,55,432வாக்காளர்களை கொண்டுள்ள நிலையில் நடந்து முடிந்த தேர்தலில் 3,80,523 பேர் வாக்களித்த அதேநேரம் 1,74,909 பேர் வாக்களிக்கவில்லை. வாக்களித்த 3,80,523 பேரில் 17,599 பேரின் வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய 3,62,924 பேரின் வாக்குகளே செல்லுபடியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது .

அதன்படி கிழக்கு மாகாணத்தில் 4,19,713 பேர் வாக்களிக்காத நிலையில் 46,465 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன . (ச-இ)

## ரயில் கடவை பயணம் அவதானம் அவசியம்

கொழும்பு, நவ. 17

ரயில் கடவைகள் ஊடாக வாகனங்களைச் செலுத்தும் போது விபத்துகள் ஏற்படாதவாறு கவனம் செலுத்துமாறு ரயில்வே திணைக்களம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அண்மைய நாள்களில் இடம்பெற்ற பல ரயில் விபத்துகளுக்கு ரயில் கடவைகளை பயன்படுத்தும் போது சாரதிகள் கவனக்குறைவாக செயற்படுவதே காரணம் என்று பிரதி பொது முகாமையாளர் என்.ஜே. இடிபொலகே தெரிவித்துள்ளார். (ச-இ)

## தேர்தல் செலவினம் பட்டியல் கட்டாயம்

### தேர்தல் ஆணைக்குழு நினைவூட்டல்

கொழும்பு, நவ. 17

தேர்தல் செலவு அறிக்கையை சமர்ப்பிக்காத அனைத்து வேட்பாளர்களுக்கும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு எதிராக வழக்கு தொடரப்படும் எனத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் செலவுகள் ஒழுங்குமுறை சட்டத்தின்படி, தேர்தல் முடிந்த 21 நாள்களுக்குள் அனைத்து செலவு அறிக்கைகளையும் தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்க வேண்டும்.

நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 888 வேட்பாளர்கள் களமிறங்கினர்.

உரிய நேரத்தில் வருமான அறிக்கையை சமர்ப்பிக்காத வேட்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல் ஆணைக்குழுவின் மேலதிக தேர்தல் ஆணையாளர் சிந்தக குலரத்ன தெரிவித்துள்ளார். (ச-இ)



## பொறுமையின்மையால் பறிபோன இரு உயிர்கள்

கொழும்பு, நவ. 17

வெலிகம பொல்அத்த ரயில் கடவையில் சிறிய லொறி ஒன்று மாத்தறையில் இருந்து காலி நோக்கி பயணித்த ரயிலுடன் நேற்றுமுன்தினம் மாலை மோதியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் உயிரிழந்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏனைய நால்வரும் மாத்தறை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ரயிலுக்கான சமிக்ஞை ஒளிரும் வேளையில் ரயில் வருவதாக அருகில் இருந்தவர்கள் எச்சரித்ததையும் மீறி லொறி ரயில் கடவையின் ஊடாக செல்ல முற்பட்டபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக வெலிகம பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)



## புதிய ஐக்கியத்தில் இலங்கை செழிக்கட்டும்

### அலிசப்ரி தெரிவிப்பு

கொழும்பு, நவ. 17

தமிழ்க் கட்சிகள் தனித்துப் போட்டியிட்ட பொதுத் தேர்தலில் வரலாற்றில் முதல் தடவையாக யாழ்ப்பாண மக்கள் தென்னிலங்கையை அடிப்படையாகக் கொண்ட தேசியக் கட்சிக்கு வாக்களித்துள்ளனர். இது முழு நாட்டினதும் ஒற்றுமையை வெளிப்படுத்துகிறது என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தல் முடிவுகள் தொடர்பில் தனது எக்ஸ் தள பதிவிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட வேறுபாடுகளை விட உண்மையான வேறுபாடுகள் எப்போதுமே அரசியல் சார்ந்தவை என்பதை இந்தத் தேர்தல் முடிவுகள் எமக்கு நினைவூட்டுகின்றன.

மேலும் இந்த மாற்றமானது மக்கள் பிளவுகளுக்கு அப்பால் செல்லத் தயாராக இருப்பதைக் காட்டுகிறது. ஒன்றாக, நீடித்த நம்பிக்கையை உருவாக்கவும் உண்மையான நல்லிணக்கத்தை அடையவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இந்தப் புதிய ஐக்கியத்தில் இலங்கை செழிக்கட்டும். மேலும் அனைத்து இலங்கையர்களின் நலனுக்காகவும் தேசிய மக்கள் சக்தி மற்றும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க சேவையாற்றுவார் என்று நம்புகின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேர்தல் கடமையின்போது

# உயிரிழந்த பொலிஸுக்கு மரியாதையுடன் தகனம்

முல்லைத்தீவு, நவ.17

தேர்தல் கடமையில் ஈடுபட்டிருந்த வேளை திடீர்ச் சுகவீனம் காரணமாக உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர் தங்கராஜா சுபாஸின் உடலம் யாழ். உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் பொலிஸ் உயர் மரியாதையுடன் அராலியில் தகனம் செய்யப்பட்டது. உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் தேர்தல் கடமைகளின் நிமித்தம் கோப்பாய் பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர் தங்கராஜா சுபாஸ் பணிக்கு அமர்த்தப்பட்டிருந்தார். இதன்போது அவர் உயிரிழந்த நிலையில் மலசல கூடத்தில் இருந்து அவரது உடல் மீட்கப்பட்டது. இருதய செயலிழப்பே இறப்புக்குக் காரணமென உடற்கூற்று பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது. அதற்கமைய அராலி மத்தியில் அமைந்துள்ள உத்தியோகத்தரின் இல்லத்தில் இறுதிச் சடங்குகள் இடம்பெற்று பொலிஸ் மரியாதையுடன் உடலம் தீயில் தகனம் செய்யப்பட்டது. (ச-125)

# பிரதம நீதியரசராக முர்து பெர்னாண்டோ

கொழும்பு, நவ. 17

நாட்டின் பிரதம நீதியரசராக திருமதி முர்து பெர்னாண்டோவை நியமிப்பதற்கான பரிந்துரையை அரசியலமைப்பு சபை அங்கீகரித்துள்ளது.

நாட்டின் பதில் பிரதம நீதியரசராக உச்ச நீதிமன்ற நீதியரசர் முர்து நிருபா பிதுஷினி பெர்னாண்டோ ஒக்ரோபர் 10ஆம் திகதி பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

அவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டப் பட்டதாரி ஆவார்.

1985 ஆம் ஆண்டு சட்டமா அதிபர் திணைக்களத்தில் இணைந்து கொண்ட அவர் 1997 ஆம் ஆண்டு பிரதி சொலிசிட்டர் ஜெனரலாகவும் 2014 ஆம் ஆண்டு மேலதிக சொலிசிட்டர் ஜெனரலாகவும் பதவி உயர்வு பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## இயமசம்ஹார உற்சவம்

யாழ்ப்பாணம், நவ.17

நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாச நாத சுவாமி திருக்கோயிலில் ஐப்பசி கடைசி வெள்ளியை முன்னிட்டு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கால(இயம) சம்ஹார உற்சவம் நடைபெற்றது. (ச-45)

## சிறீதரனுக்கு வரவேற்பு

கிளிநொச்சி, நவ. 17

நாடாளுமன்ற உறுப்பினராக நான்காவது தடவையாகத் தெரிவு செய்யப்பட்ட சிவஞானம் சிறீதரனுக்கான வரவேற்பு நிகழ்வு கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகளைத்தொடர்ந்து, கட்சி அலுவலகத்தில் மக்களுடன் கலந்துரையாடலிலும் அவர் ஈடுபட்டார். (ச-25, 113)



படங்கள் - ஐ.சிவசாந்தன்



# பழைய மாணவர் சங்க அபிவிருத்திக் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ.17

யாழ்.-மல்லாகம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க அபிவிருத்திக் கூட்டம் பாடசாலை மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறவுள்ளது. கூட்டத்தில் அனைத்துப் பழைய மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு பாடசாலையின் அதிபர் கேட்டுள்ளார். (ச-45-66)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாள். தெய்வ அனுகூலம் உண்டாகும். ஆனால், புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணை வழி உறவினர்களால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், திடீர் செலவுகளால் கையிருப்பு கரையும். தாயின் உடல் நலனில் கவனம் தேவை. உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சிறு சிறு பிரச்னைகள் ஏற்பட்டாலும், அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். தாய்மாமன் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். கணவன் மனைவிக் கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வருகையால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். வெளியூர்ப் பயணம் தவிர்க்கவும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**சிம்மம் :** மற்றவர்களுடன் வீண் வாக்குவாதம் செய்வதை தவிர்க்கவும். சிலருக்கு கோயில்களுக்குச் சென்று பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். எதிர்பாராத பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படும். தந்தையுடன் கருத்துவேறுபாடு வரக்கூடும்.

**கன்னி:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். மனதில் தைரியம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**துலாம்:** மனதில் இனம் தெரியாத சஞ்சலம் ஏற்படக்கூடும். உறவினர்களுடன் பேசும்போது பதற்றம் வேண்டாம். வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும். தாய்வழி உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். முக்கிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**தனுசு:** உறவினர்களுடன் அனுசரணையாக நடந்து கொள்ளவும். புதிய முயற்சி சாதகமாக முடியும். கணவன் மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால், ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது.

**மகரம்:** குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும்வாய்ப்புசிலருக்குஏற்படக்கூடும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தாய்மாமன் வகையில் திடீர் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மீனம்:** கூடுமானவரை வெளியூர்ப் பயணம் மேற் கொள்வதைத் தவிர்த்துவிடவும். தந்தை வழி உறவுகளால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரித்தாலும், சக ஊழியர்களின் உதவி யுடன் உற்சாகமாகச் செய்து முடிப்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# விடியலின் பாதையை காட்டட்டும் திசைகாட்டி

சுதந்திர இலங்கையின் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் அரியணை ஏறியிருக்கின்றார் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க. கடந்த 70 ஆண்டுகளாக இலங்கையின் தலைவிதியைத் தீர்மானித்துக் கொண்டிருந்த எந்தவொரு கட்சிக்கும், விகிதாசாரத் தேர்தலில் கொடுக்காத பலத்தை - ஆணையை, இம்முறை அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் கொடுத்திருக்கின்றனர். கூட்டணி இல்லாமல் - கட்சித் தாவல்கள் இல்லாமல் - இனவாதம் எழுப்பாமல் இலங்கையில் இப்படியான வெற்றியை அநுர அறுவடை செய்திருப்பது அசாத்தியமானது. அதிலும் கடந்த நாடாளுமன்றத்தில் வெறும் மூன்றே மூன்று ஆசனங்களுடன் இருந்து, அத்தனை மக்களினதும் நம்பிக்கையை வாரிச் சுருட்டியிருப்பது உலக அரசியலில் நூற்றாண்டுக்கு ஒருமுறை நிகழும் அதிசயம். அந்த அதிசயிக்கத்தக்க அசாத்தியமான தீர்ப்பை மக்கள் வழங்கியிருக்கின்றார்கள் என்றால், அதற்கு இரண்டே இரண்டு காரணங்களே இருக்கமுடியும். ஒன்று, கடந்த ஆட்சியாளர்கள் மீதிருந்த வெறுப்பு மற்றும் சலிப்புத்தன்மை. இன்னொன்று, ஜனாதிபதி அநுரவின் 'திசைகாட்டி' நாட்டுக்கு ஒரு திசையைக் காட்டும் என்ற எதிர்பார்ப்பு.

நாடாளுமன்றத்தை சாதாரண பெரும்பான்மையுடன் சுத்தப்படுத்தினால்போதும் என்பதுதான் ஜனாதிபதி அநுர தரப்பினரின் கோரிக்கையாக இருந்தது. நாம் அறுதிப் பெரும்பான்மையை எதிர்பார்க்கவில்லை என்று ஜனாதிபதியே வெளிப்படையாகக் கூறியிருந்தார். ஆனால், 159 ஆசனங்களை அள்ளிக் கொடுத்து மக்கள் தாராளம் காட்டியிருக்கின்றார்கள். நாடாளுமன்றத்தை சாதாரணமாகச் சுத்தப்படுத்தாமல், மூலை முடுக்கெங்கும் சுத்தப்படுத்தியிருக்கின்றோம் என்ற செய்தியை மக்கள் வழங்கியிருக்கின்றார்கள். இப்போது இதற்குப் பதிலுபகாரம் செய்ய வேண்டிய பொறுப்பு ஜனாதிபதிக்கு உள்ளது. இதுவரை மாறிமாறி ஆட்சியில் இருந்த அரசாங்கங்களின் பல்வேறுபட்ட தவறுகளை தேசிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டியிருந்தது. ஏகப்பட்ட விமர்சனங்களை கடந்த அரசாங்கங்கள் மீது முன்வைத்தது. அவற்றை சரிசெய்து நாட்டைச் சீர்ப்படுத்தவேண்டிய பெரும் பொறுப்பு அநுரவுக்கு முன்பாக தற்போதுள்ளது. அரசமைப்பு, ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகார நீக்கம் உள்ளிட்ட எந்தவொரு விடயத்திலும் சாக்குப் போக்குகளைச் சொல்லித் தப்பிக்க தேசிய மக்கள் சக்தியால் முடியாது. ஏனெனில், இலங்கை நாடாளுமன்றத்தில் எந்தவொரு சட்டத்தையும் இயற்றுகின்ற மாற்றியமைக்கின்ற அதிகாரத்தைத்தான் மக்கள் இப்போது வழங்கியிருக்கின்றார்கள்.

ஒருவகையில் ஜனாதிபதி அநுரவுக்கு அடுத்த ஐந்து ஆண்டுகளும் கத்திமுனைப் பயணம்தான். அவரைத் தடுக்கக்கூடிய - பலவீனப்படுத்தக்கூடிய எந்தவொரு முகாந்திரமும் இல்லாத நிலை மக்களால் ஏற்படுத்தப்பட்ட பின்னரும், அவர் தன் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் விடுவாராக இருந்தால், நிச்சயம் கூடிய விரைவில் தோற்கடிக்கப்படுவார். மக்கள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகாரத்தில் ஏற்றுகின்றார்களோ, அவ்வளவுக்கவ்வளவு இழுத்து வீழ்த்துவதிலும் வல்லவர்கள். ஜனாதிபதி அநுர மீது, இலங்கையர்களுக்கு இவ்வளவுதூரம் நம்பிக்கையும் - அன்பும் - எதிர்பார்ப்பும் ஏற்பட்டமையின் பின்னணியே, அதே நம்பிக்கையை - அன்பை - எதிர்பார்ப்பைப் பெற்ற கோத்தாபய ராஜபக்ச தோல்வியடைந்த ஜனாதிபதியாக மாறியமை தான்.



# தேசியப்பட்டியல் ஆசனத்துக்கு பெண் உறுப்பினரை உள்ளீர்க்க!

## சிவசேனை அமைப்பு கோரிக்கை

**யாழ்ப்பாணம், நவ.17**

**இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினராகப் பெண் ஒருவரையே தேர்வு செய்ய வேண்டுமெனத் தலைவர் மாவை சேனாதிராசாவிடமும், அவர் தலைமையிலான நடுவண் குழு உறுப்பினர்களிடமும் இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 75 ஆண்டு கால வரலாற்றில் பெண் ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராகவில்லை. 2024 நர்டாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சிக்கு வாக்களித்த 2 இலட்சத்து 56,000 வரையான வாக்காளர்களுள் 60 வீதமானவர்கள் பெண்கள். நலிந்த, பின்தங்கிய, சார்பாளர் இல்லாத குழுக்களுக்கு இடம் கொடுக்கவே விகிதாசாரத் தேர்தல் முறையும், தேசியப் பட்டியலும் உள்ளது- என்றுள்ளார். (ச-66)

# சபாநாயகராகிறார் பிமல் ரத்நாயக்க



கொழும்பு, நவ.17

புதிய சபாநாயகராக தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் பிமல் ரத்னாயக்க நியமிக்கப்படவுள்ளார் எனத் தெரியவருகின்றது.

பிமல் ரத்னாயக்கவுக்கு தேசிய மக்கள் சக்தியால், தேசியப் பட்டியல் ஊடாக இடமளிக்கப்பட்டுள்ளதோடு, நடுநிலைத் தன்மையை கருதியே தேசியப் பட்டியல் வாய்ப்பு வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. மேலும் பிரதிச் சபாநாயகர் பதவி பெண் எம்.பி.யொருவருக்கு வழங்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (ச-45-44)



# விசேட பஸ் சேவை

கொழும்பு, நவ.17

பொதுத்தேர்தலில் வாக்களிப்பதற்காக தூர இடங்களுக்குச் சென்று கொழும்பு திரும்பும் மக்களுக்காக நேற்று முதல் விசேட பஸ் சேவைகள் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதிப் பொதுமுகாமையாளர் பண்டுக ஸ்வர்ண ஹன்ச தெரிவித்துள்ளார். அதன்படி இன்றும் நாளையும் இந்த விசேட பஸ் சேவைகள் இடம்பெறும்.

இதேவேளை, மக்களின் வசதிக்காக தனியார் பஸ்களை இயக்குவதற்கு தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. (ச-இ)

# ஆசிய வங்கியிடமிருந்து 50 மில்லியன் டொலர்!

கொழும்பு, நவ.17

இலங்கைக்கு 50 மில்லியன் டொலர் கடனுதவி வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது. இலங்கையில் சோலார் பேனல் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக இந்த கடனுதவியை ஆசிய வங்கி வழங்கவுள்ளது.

இதற்காக இலங்கையின் 10 நிதி நிறுவனங்களுடன் இணைந்து குறைந்த வட்டியில் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# தேசியப் பட்டியலில் நுழைகிறார் நாமல்

கொழும்பு, நவ.17

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தனது கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினராக நாமல் ராஜபக்சவை முன்மொழியத் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார். (ச-இ)

## நாளை

18.11.2024

திங்கட்கிழமை - கார்த்திகை - 03

சுபநேரம் : 12.08 - 01.38

ராகுகாலம் : 07.38 - 09.08

## நாளொரு நல்வார்த்தை

மரங்களின் மீது கரிசனை கொண்ட கடவுள் அவற்றை வரட்சி, நோய்கள், பனிச்சரிவுகள், ஆயிரமாயிரம் சூறாவளிகள் காப்பாற்றினாலும் முட்டாள்களிடம் இருந்து மட்டும் அவரால் அவற்றைக் காப்பாற்ற முடியவில்லை.

-ஜோன் மூர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28.02.1928

மறைவு 27.11.2023

## அமரர் இராஜதுரை சிவக்கொழுந்து

எங்கள் குடும்பத்தின் குல விளக்காகி,
ஒளி தந்து எம்மைக் காத்த எங்கள் அம்மா!
ஆண்டொன்று கடந்ததம்மா,
உம் பிரிவால் ஒவ்வொரு நொடிப்பொழுதும்
நாம் வருந்துகிறோம் அம்மா!
மீண்டுமுமைக் காணவென
எம் மனம் ஏங்குகிறது அம்மா
எங்கள் மனங்களில் என்றும்
நீர் நீங்காது நிலைத்திருப்பீர் அம்மா
உங்கள் பாச நினைவுகள்
என்றென்றும் அழியாது அம்மா!

**உங்கள் ஆத்மா சாந்தியடைய**
**எல்லாம் வல்ல அந்திரான் முருகனைப்**
**பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி சாந்தி சாந்தி**
**என்றென்றும் உங்கள் நினைவில் வாழ்ந்துகொண்டிருக்கும்**

**21, சங்கரப்பிள்ளை வீதி,**
**மானிப்பாய்.** (CS/56694) J-1 **குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்



பிறப்பு 08.07.1944

இறப்பு 16.11.2024

## தமிழ் பேராசான் நாகலிங்கம் குழந்தைவேல்

**(இளைப்பாறிய உதவி ஆணையாளர், சமநல சேவைத் திணைக்களம்)**

வேலணையைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கினை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் குழந்தைவேல் அவர்கள் நேற்று (16.11.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - தங்கமுத்து தம்பதியினரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - ஆச்சிப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற விக்கினேஸ்வரி (இளைப்பாறிய பிரதி அதிபர் யா/ பெரியபுலம் மகா வித்தியாலயம்) அவர்களின் பாசமிகு கணவரும், சரத்சந்திரா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற சத்தியேந்திரா மற்றும் சமுத்திரிக்கா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வறஞ்சினி கௌசிகன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், யானுசன், அஸ்மிதா, திப்திகா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, சங்கரப்பிள்ளை, ஆச்சிப்பிள்ளை, பஞ்சரத்தினம், பரிபூரணம், தம்பிராசா அருணாசலம், தில்லையம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கதிரமலை செல்வரட்ணம் மற்றும் தியாகராசா (பிரான்ஸ்), காலஞ்சென்ற மனோகரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணி அளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல: 63/2 கே.கே.எஸ் வீதி**
**கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**077 957 1834**

# மரண அறிவித்தல்



மண்ணில் 16.07.1934

விண்ணில் 16.11.2024

## அமரர். ஞானம் இரத்தினம்

கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானம் இரத்தினம் நேற்று (16.11.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம்-பொன்னம்மா தம்பதியின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற கந்தையா-கண்ணம்மா தம்பதியின் மருமகளும் காலஞ்சென்ற இரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசையா, குணரத்தினம், தங்கம்மா, அன்னம்மா, சீவரத்தினம், இரத்தினம், செல்வராசா ஆகியோரின் சகோதரியும் கலாநிதி (ஓய்வுநிலை உபஅதிபர் கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜெயக்குமார் (கொழும்பு), சாந்தகுமார் (லண்டன்), சிவநிதி (கொழும்பு), கருணசீலன் (சிங்கப்பூர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுந்தரேசன், வசந்திதேவி, வாசுகி, ரவீந்திரன் (மாருதி மணி எக்சேஞ்) தர்மஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் விபீசாந், பிரசாந் (பவன்), தயானந்தி, நிரோசானந், நிருசங்கர், காயத்திரி, வர்ஷா, ருக்ஷி ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.11.2024) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**ஆடியபாதம் வீதி,**
**கொக்குவில் மேற்கு**
**கொக்குவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்,**
**077 634 8948**

(CS 1665) V-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 29.08.1954

மறைவு 16.11.2024

## பொன்னையா ஓம்லிங்கமூர்த்தி

ஏழாலையை பிறப்பிடமாகவும் புங்குடுதீவு 4ம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா ஓம்லிங்கமூர்த்தி நேற்று (16.11.2024) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா-அன்னபூரணத்தின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-இலட்சுமியின் அன்பு மருமகனும் கனகாம்பிகையின் அன்புக் கணவரும் தர்சிகா, விதர்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிரோஜனின் பாசமிகு மாமனாரும் கிஷாந்தின் அன்புப் பேரனும் ஓமேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, இராசரெத்தினம் மற்றும் கனகலிங்கம், மகாராணி ஆகியோரின் மைத்துனரும் இராசலிங்கம் (மீசை), வரதலட்சுமி ஆகியோரின் சகலனும் ஆவார் சிவசோதி கலாநிதி ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக கேரதீவு இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**04 ம் வட்டாரம்,**
**புங்குடுதீவு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**076 982 7213**

(CS 55659) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நாடாளுமன்றத் தேர்தலில்

# செல்லுபடியற்றதாக 6,67,240 வாக்குகள்

**கொழும்பு, நவ.17**

**நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பதிவான வாக்குகளில் 6,67, 240 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**



தேர்தலுக்கு 17,140,354 வாக்காளர்கள் தகுதி பெற்ற நிலையில் வாக்களித்த வாக்காளர்களின் எண்ணிக்கை 11,815,246 ஆக பதிவாகியுள்ளது.

இந்த நிலையில், செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கை 11,148,006 ஆகவும், நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 6,67,240 ஆகவும் பதிவாகியுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை குறித்த தேர்தலை வரலாற்றில் மிகவும் அமைதியான தேர்தல் என்றே கூற முடியும் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். (ச-இ)




## கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு தந்தை கொலை

*தாய், மகள் படுகாயம்*

கொழும்பு, நவ.17

காலி, தடல்ல பிரதேசத்தில் உள்ள வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்த முகமூடி அணிந்திருந்த நபர் ஒருவர், வீட்டிலிருந்த தந்தையைக் கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்துள்ளதுடன் தாயையும் மகளையும் காயப்படுத்தியுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது. 47 வயதுடைய குடும்பஸ்தரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். காயமடைந்த 45 வயதுடைய தாயும் 15 வயதுடைய மகளும் சிகிச்சைக்காக கராப்பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

## நாடாளுமன்றத்துக்கு 20 பெண்கள் தெரிவு

### தே.ம.சக்தியிலிருந்தே அதிக பெண்கள் படையணி

கொழும்பு, நவ.17

2024 ஆம் ஆண்டுக்கான பொதுத்தேர்தலில் 20 பெண்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலான பெண்கள் தேசிய மக்கள் சக்தி கட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்டத்திலிருந்து சமன்மலி குணசிங்க, ஹரிணி அமரசூரிய, பதுளை மாவட்டத்தில் அம்பிகா சாமுவேல், நிலாந்தி கோட்டஹச்சி, களுத்துறை மாவட்டத்தில் ஓஷானி உமங்கா, மாத்தறை மாவட்டத்தில் சரோஜா போல்ராஜ், இரத்தினபுரி மாவட்டத்தில் நிலுஷா கமகே, கேகாலை மாவட்டத்தில் சாகரிகா அதாவுத, புத்தளம் மாவட்டத்தில் ஹிருணி விஜேசிங்க, மொனராகலை மாவட்டத்தில் சதுரி கங்கானி, கண்டி மாவட்டத்தில் துஷாரி ஜயசிங்க, காலி மாவட்டத்தில் ஹசர லியனகே, மாத்தளை மாவட்டத்தில் தீப்தி வாசலகே, யாழ் மாவட்டத்தில் ராசலிங்கம் வெண்ணிலா தெரிவாகியுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் சார்பில் கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களை பிரதிநிதித்துவம் செய்த இரண்டு பெண்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ச-இ)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.17

சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா பாடசாலை முதல்வர் பா.பார்த்தீபன் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 1 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.ரவீந்திரன், சிறப்பு விருந்தினராக கட்டடப் பொறியியலாளர் மற்றும் பழைய மாணவி திருமதி நி.சுபாங்கன், விருந்தினர்களாக சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை ஆசிரியர் திருமதி சு.விவேகானந்தன், ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை ஆசிரியர் திருமதி ஐ.ஜெயகாந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-45-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் தீர்ப்புக்கமைய நாம் ஒன்றுபடவேண்டும்



## எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், நவ.17**
**தமிழ் மக்களின் தீர்ப்பை ஏற்று தமிழ்த் தேசிய கட்சிகள் ஓரணியில் இணையவேண்டும் என்பதையே நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் முடிவு உணர்த்தியுள்ளது. தமிழ் மக்கள் வழங்கிய இந்தத் தீர்ப்பை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம் என்று தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.**

வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் கூறியதாவது:-
நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தல் முடிவு முழு நாட்டுக்கும் ஏன் எங்களுடைய தமிழீழத்துக்கு பல செய்திகளை கூறியுள்ளது. வடக்கு - கிழக்கு தமிழீழ பகுதிகளிலுள்ள மக்கள் ஒற்றுமையை விரும்புகின்றனர். தமிழ் மக்கள் வழங்கிய இந்தத் தீர்ப்பை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம்.
தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் உள்ள கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட . நாங்கள் ஐந்து கட்சிகள் ஒன்றாக நிற்கின்றோம். ஐந்து பத்தாக வேண்டும். சிங்களப் பேரினவாத கட்சிகள் தமிழீழத்திலே கோலோச்சுவதனை தடுத்து நிறுத்தும் வகையில் தமிழ்த் தேசிய கட்சிகள் அனைத்தும் ஓரணியாக ஒன்றுபடவேண்டும் - என்றார். (ச-45-100)

# கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.17
2022, 2023 ஆம் ஆண்டுகளில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைகளில் சித்தியடைந்து பல்கலைக் கழகம் செல்பவர்களுக்கும், க.பொ.த .சாதாரண தரப் பரீட்சையில் ஐந்து பாடங்களுக்கு மேல் 'ஏ' சித்திபெற்ற மாணவர்களுக்கும், தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அந்தணகுல மாணவர்களுக்குமான கௌரவிப்பு நிகழ்வு சர்வதேச இந்துமதக் குருமார் ஒன்றியம் ஏற்பாட்டில் யாழ்.வண்ணை வேங்கடேச ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவில் லக்ஸ்மி நாராயண திருமண மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் தலைவர் து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயர் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ச-45-66)


# தாய்லாந்துப் பெண் போதையுடன் கைது

கொழும்பு,நவ.17
கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து 18 கோடியே 60 இலட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருள்களுடன் வெளிநாட்டு பெண்ணொருவர் கைதாகியுள்ளார்.
அவரிடமிருந்து 22 கிலோகிராம் குஷ் மற்றும் ஹஷீஸ் ரக போதைப்பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக விமான நிலையத்துக்கான செய்தியாளர் தெரிவித்துள்ளார். தாய்லாந்தைச் சேர்ந்த பெண்ணொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். அவர் இலங்கையில் அழகுக்கலை நிலையமொன்றை நடத்தி வருகின்றமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ச-இ)

# வடக்கின் நம்பிக்கையை வென்றமைக்கு பாராட்டு

## ஐ.தே.க. தெரிவிப்பு

கொழும்பு, நவ. 17
இந்தத் தேர்தல் மூலம் தெற்கு அரசியல் கட்சி ஒன்று வடக்கின் நம்பிக்கையை வெற்றிகொண்டுள்ளமை தொடர்பில் எமது பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறோம் என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.
காலியில் அமைந்துள்ள ஐக்கிய தேசிய கட்சி காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் வரலாற்று வெற்றியை பெற்றுள்ளது. இது இலங்கைக்கு விசேட சந்தர்ப்பமாகும்.
ஜனாதிபதி உள்ளிட்ட இந்த அரசாங்கம் மக்களுக்கு நிறைவேற்ற வேண்டிய பல எதிர்பார்ப்புகள் இருக்கின்றன. தேசிய மற்றும் சர்வதேச அளவில் அவர்கள் ஏற்றுக்கொண்ட சவால்களை வெற்றி கொள்ள வேண்டி இருக்கிறது. அதற்காக அவர்களுக்கு நாங்கள் இடையூறாக இருக்கக்கூடாது.
அவர்கள் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை எவ்வாறு நிறைவேற்றுவது என்பதை நாங்கள் இலங்கையர்களாக பார்த்துக்கொண்டிருக்க வேண்டும் - என்றார். (ச-இ)



# தேர்தலுக்குப் பிந்திய காலம்: பொலிஸார் தீவிர கண்காணிப்பு

கொழும்பு, நவ.17
நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு வாரத்துக்கு தேர்தலுக்கு பிந்தைய காலம் நடைமுறையில் இருக்கும். இந்தக் காலப்பகுதியில் நாடு முழுவதும் பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதி பொலிஸ்மா அதிபருமான சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். ஒரு வார காலப்பகுதியில், பொது இடங்களில் எந்தவிதமான கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் பேரணியை நடத்தமுடியாது. நாடு முழுவதும் பொலிஸார் ரோந்துப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு தேவையான பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# யாழ். அரசியல்வாதிகளுக்கு தேர்தல் முடிவு சிறந்த பாடம்

## சமன் வித்தியாரத்ன தெரிவிப்பு

கொழும்பு, நவ. 17
வெளிவந்துள்ள நாடாளுமன்ற தேர்தல் பெறுபேறுகள் யாழ்ப்பாண அரசியல் வாதிகளுக்கும் சிறந்த பாடமாகும் என்று பதுளை மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியில் அதிகூடிய விருப்பு வாக்குகளை பெற்று தெரிவான சமன் வித்தியாரத்ன தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
இன ஐக்கியத்தை வெளிப்படுத்தும் வகையில் தேர்தல் பெறுபேறுகள் அமைந்துள்ளதுடன் யாழ்ப்பாணத்தில் எமக்கு கிடைத்த வெற்றி பெரு வெற்றியாகும்.
இனங்களுக்கிடையிலான இணக்கப்பாடு மற்றும் ஒற்றுமையை காணக்கூடியதாக இருக்கிறது.
இது அதி விசேட வெற்றியாகும். இந்த



பெறுபேறு யாழ்ப்பாண அரசியல்வாதிகளுக்கும் சிறந்த பாடமாகும் - என்றார். (ச-இ)

# ரஷ்யப் பெண் துஷ்பிரயோகம்

கொழும்பு, நவ. 17
அஹுங்கல்லவில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் ரஷ்ய பெண்ணொருவர் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண் அஹுங்கல்ல பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து, சந்தேகநபரை கைது செய்வதறறற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்த்...

குமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் வாக்கு வங்கியில் கணிசமானளவு வீழ்ச்சி ஏற்பட்டிருப்பது தங்களுக்கு அதிர்ச்சியைத் தந்துள்ளதாகவும் அவர் ஏற்றுக்கொண்டார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த ஐந்து வருடங்களாக எங்கள் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு நாங்கள் ஏனைய தரப்புக்களுடன் இணைந்து செயற்படாதது மாத்திரமே. தமிழ்மக்கள் பாதிக்கப்படுகின்ற போதும், வீதிகளில் இறங்கிப் போராடுகின்றபோதும் எமது உறுப்பினர்கள் மக்களுடன் மக்களாகச் செயற்பட்டு வருகிறார்கள். அது மாத்திரமல்லாமல் மக்கள் நேரடியாகச் செயற்பட முடியாத இடங்களில் கூட நாங்கள் தலையிட்டும் பாதிப்புகளை எதிர் கொண்டுள்ளோம். மக்கள் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்படும் போது அவர்களுக்கு நேரடியான நிவாரண உதவிகளை வழங்குவதுடன், கல்விசார்ந்த மாணவர்களுக்கான உதவிகளும் வேறு எந்தக் கட்சிகளுடனும் ஒப்பிட்டுப் பார்க்க முடியாதளவுக்கு உள்ளன. இவ்வாறான நிலைமைகளுக்கு மத்தியிலும் எங்கள் வாக்கு வங்கியில் சரிவு ஏற்பட்டுள்ள சூழலில் இதுதொடர்பான ஆய்வுகளை நாங்கள் எதிர்காலத்தில் நிச்சயம் செய்வோம்.

கடந்த முறை நாடாளுமன்றத் தேர்தலில் எங்களுக்கு வாக்களித்து இந்தத் தடவை எமக்கு வாக்களித்தமையைத் தவிர்த்து வேறு தரப்பினருக்கு வாக்களித்தவர்கள், விரும்பினால் நேரடியாக எங்களுடன் தொடர்பு கொண்டு தங்கள் நிலைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும். இவ்வாறான செயற்பாட்டை நாங்கள் வரவேற்கின்றோம்.

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்த மூன்று ஆசனங்களுக்கான வாக்குகளையும் பார்த்தோமானால், கடந்த முறை நாடாளுமன்றத் தேர்தலில் டக்ளஸ் தேவானந்தாவுக்கும், அங்கஜன் இராமநாதனுக்கும் கிடைத்த வாக்குகளையும் ஒன்றாகக் கூட்டினால் வருவதை விடக் குறைவான வாக்குகளே கிடைத்துள்ளன. தமிழ்த் தேசிய வாக்குகளை நோக்கும் போது கடந்த நாடாளுமன்றத் தேர்தலை விடச் சற்றுக் குறைவான வாக்குகளே கிடைத்துள்ளன. அதற்குப் பிரதான காரணம் கணிசமானளவு வாக்குகள் நிராகரிக்கப்பட்ட வாக்குகளாகக் காணப்படுவதுடன் தமிழ்த்தேசியக் கட்சிகளிடமிருந்து வாக்குகள் பிரிந்து தமிழ்த்தேசியத்தைக் கோட்பாடு ரீதியாகப் பேசிய சுயேச்சைக் குழுக்களுக்கும், வேறு கட்சிகளுக்கும் சென்றுள்ளன - என்றார்.

(அ-ம-66-26)

## அறிவித்தல்

உயர்தரத்தை நோக்கமாகக் கொண்ட வட மாகாணத்தின் முன்னோடி டயர் மீள் நிரப்பு நிறுவனமான நோர்தேண் இன்டஸ்ரீஸ் சிறிது கால இடைவேளையின் பின்னர் தனது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியோடு அறியத்தருகின்றோம்.

இயக்குநர்
நோர்தேண் இன்டஸ்ரீஸ் (பி) லிமிட்டெட்
69, பிறவுண் வீதி, கொக்குவில்
021 222 1735, 070 714 8691

## அலுவலக உதவியாளர் தேவை

சாவகச்சேரியில் அமைந்துள்ள விநியோக நிறுவனமொன்றிற்கு அலுவலக உதவியாளர் (பெண்) தேவை

- கணனி அறிவு அவசியம் (MS OFFICE)
- அடிப்படை ஆங்கில அறிவு அவசியம்
- சாவகச்சேரியை அண்மித்த பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:
077 225 0149



## ஈரானின் அணு நிலையங்கள் இஸ்ரேலால் தாக்கி அழிப்பு!

வொஷிங்டன், நவ. 17

ஈரான் மீது கடந்த மாதம் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களின்போது, ஈரானின் இரகசிய அணு ஆராய்ச்சி நிலையங்கள் அழிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் ஒரு மணிநேரம் நீடித்த இஸ்ரேலின் விமானத் தாக்குதல்கள் தொடர்பில், அமெரிக்கா மேற்கொண்ட புலன் விசாரணைகளிலேயே, ஈரானுக்கு ஏற்பட்ட இழப்புகள் குறித்த தகவல்கள் தெரியவந்துள்ளன.

இஸ்ரேலின் தாக்குதல்களின் போது, ஈரானின் இரண்டு இரகசிய அணு ஆராய்ச்சி நிலையங்கள் தகர்த்து அழிக்கப்பட்டுள்ளன. அத்துடன் அணுகுண்டுகளை வெடிக்க வைப்பதற்கான அடிப்படைக் கட்டமைப்பு இயந்திரத்தை வடிவமைக்கும் தளமும் இஸ்ரேலால் அழிக்கப்பட்டுள்ளது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஈரானின் இராணுவத் தளங்களை இஸ்ரேல் இலக்கு வைத்தது என்பதற்கு அப்பால், அணுவாயுத உற்பத்தித் தளங்கள், ஆராய்ச்சி மையங்கள் மற்றும் ஏவுகணைகளுக்கு திரவ எரிபொருளை நிரப்பும் நிலையங்கள் என்பனவற்றையே இஸ்ரேல் பிரதான இலக்காக வைத்துச் செயற்பட்டுள்ளது. அதாவது ஈரானின் இராணுவக் கட்டமைப்பையும் விட, அந்த இராணுவக் கட்டமைப்பைப் பலப்படுத்தும் தளங்களையே இஸ்ரேல் பிரதான இலக்காகக் கொண்டுள்ளது என்றும் அமெரிக்கா மேலும் கூறியுள்ளது. (ம)

## கௌரவிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ. 17

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் நடத்தும் அந்தணகுல மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா இன்று பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்ப்பாணம் வெங்கடேஸ்வர பெருமாள் ஆலய லக்சுமி நாராயண திருமண மண்டபத்தில் பண்டிதர் சிவஸ்ரீ ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் வெற்றிபெற்று பல்கலைக் கழகத்துக்குத் தெரிவான மாணவர்களும், க.பொ.த. சாதாரணப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களும், தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுமே இவ்வாறு கௌரவிக்கப்படவுள்ளனர். (ம-131)

## இருபத்தைந்தாம், இருபதாம் ஆண்டு நினைவலைகள்



செல்வன்
பாலகிருஷ்ணன் பிரதீபன்
தோற்றம் : 17.04.1981



செல்வன்
சிவநாதன் ரவிசங்கர்
தோற்றம் : 02.02.1981



செல்வன்
சுந்தரலிங்கம் சிவோத்தமன்
தோற்றம் : 23.03.1981



செல்வன்
பூரணமூர்த்தி சுந்தர்வன்
தோற்றம் : 11.05.1981

17.11.1999 : மறைவு



செல்வன்
மரியரட்ணம் குணரட்னம்
தோற்றம் : 04.08.1981

17.05.2004

**இந்நாளில் ஹாட்லியின் மைந்தர்கள் ஆகிய நாம் உங்களை பெருமையுடன் நினைவு கூருகின்றோம்.**

இன்று 17.11.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் இன்பர்சிட்டி கடற்கரையில் சுகாதார விதிமுறைகளை பின்பற்றி இடம்பெறும் நினைவு கூரல் நிகழ்வும் நாளை 18.11.2024 திங்கட்கிழமை 9.00 மணியளவில் கல்லூரியில் இரத்ததான நிகழ்வும் நடைபெறும்.

**ஆர்வமுள்ளவர்களை அன்புடன் அழைக்கின்றோம்.**

"ஹாட்லியின் மைந்தர்கள் நினைவு நிதியம்" ஏற்பாட்டாளர்கள்.

தொடர்பு : அ.டொமினிக் - 0774 [illegible] / [illegible] - 0773 122 198 E-mail : hartleyboys@gmail.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அன்னையின் நினைவில் 8 ஆண்டுகள்



மலர்வு 13.09.1935 | உதிர்வு 17.11.2016

அமரர் திருமதி செல்லத்துரை

## தெய்வானைப்பிள்ளை

பாலூட்டி தாலாட்டி சீராட்டி வளர்த்த தாயே
நெஞ்சினிலே என்றும் நீங்காமல் நீ இருந்து
எம் நினைவிலே கலந்திருக்கும் நினைவுகள்
என்றென்றும் பசுமையாய் பதிந்திருக்க
மறைந்து ஆண்டுகள் எட்டு கழிந்தாலும்
நெஞ்சிலே நீ இருப்பாய்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்

(cs 29061 (N-1)

## உடனடி வேலை வாய்ப்பு

கட்டட நிர்மாண நிறுவனத்திற்கு பின்வரும் வேலைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆர்வம் உள்ளவர்கள் தங்களது சுயவிபரக்கோவையை 24.11.2024 திகதிக்கு முன்னர் கிடைக்க கூடிய வகையில் கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

1. விற்பனைப் பிரதிநிதி
2. களஞ்சியப் பொறுப்பாளர்

தகைமைகள்
- க.பொ.த (உயர்தரம்)
- வயதெல்லை:- 35 வயதிற்கு உட்பட்டவர்கள்
- சாரதி அனுமதிப்பத்திரம்
- கட்டட பொருட்கள் சம்பந்தமான அறிவுடன் ஆங்கிலம்/ கணினி மற்றும் சிங்களம் அறிவு உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

Email:
vacancynsc@gmail.com தொடர்புகளுக்கு: 077 712 0945

(CS 1857) P-1

## TRAVEL AGENT CALL CENTER JOBS, EMPLOYMENT WITH AMDEUS EXPERIENCE

தமிழ், ஆங்கில மொழியில் புலமையுடைய Amdeus Airline Reservation System த்தைக் கையாளும் திறமையுடையவர்களுக்கான வேலைவாய்ப்பு

ஐரோப்பாவில் 25 வருடங்களுக்கு மேலாக IATA அங்கத்துவம் பெற்ற AIRLINE TICKET பயணமுகவர் நிறுவனம் ஒன்றிற்கு இலங்கையில் இருந்து வேலை. Amadeus Airline Reservation System (Call Center) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தேவையான தகுதிகள்:
1. Amadeus Airline Reservation system experience
2. பயணமுகவராக பணியாற்றிய முன் அனுபவம்.
3. சரளமான தமிழ், ஆங்கில அறிவு
4. கணினிகளைக் கையாளும் திறன்

தகைமை உடையவர்கள் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் CV க்களை அனுப்பி வைக்கவும்

(CR43717) J-1

nirmalan73@gmail.com
077 766 1216

## வாகனங்கள் விற்பனைக்கு

1. யூயின் (சைனா) லொறி
   Lc 7XXX - தொடர் இலக்கம்
2. LE 8XXX - தொடர் இலக்கம்
3. 63 2XXX - தொடர் இலக்கம் Benz வான்
4. LI 7XXX - தொடர் இலக்கம் TATA - 407
5. RH 6XXX - தொடர் இலக்கம் TAFE - 70 மணித்தியாலம்
6. DAG 4XXX - மக்சிமோ
7. KP 7XXX - TATA சுமோ தொடர் இலக்கம்

தொடர்பு :- 077 855 3479, 077 923 4242

## மரண அறிவித்தல்



தோற்றம் 20 • 01 • 1959 | மறைவு 16 • 11 • 2024

### நவரத்தினம் கணேசமூர்த்தி

(மின்சார சபை ஊழியர்)

சங்கானையைப் பிறப்பிடமாகவும், இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் கணேசமூர்த்தி (மின்சார சபை ஊழியர் - CEB) நேற்று (16.11.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - சிதம்பரேஸ்வரி ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகசபாபதி - அன்னலட்சுமி தம்பதியரின் மருமகனும், இராஜேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், ஹம்ஸாநந்தி (ஆசிரியர், கிளி/ கிராஞ்சி அ.த.க. பாடசாலை), றஜீவன் (IT Company, Kondavil), தனேசன் (Faculty of Management Studies and Commerce, Universitry of Jaffna) ஆகியோரின் தந்தையும், சந்திராதேவி, மகிழ்ராஜா, இன்பராஜா ஆகியோரின் சகோதரனும், தணிகாசலம், ராசாத்தியம்மா, பாலசுப்பிரமணியம், சிவகுமார், மகேந்திரராஜா, யோகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மயான வீதி,
இணுவில் தெற்கு, இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்
076 983 0433

(CS/56689) J-1

## மரண அறிவித்தல்



பிறப்பு 13 • 02 • 1960 | இறப்பு 16 • 11 • 2024

### சின்னையா சண்முகராசா

கலாசாலை வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், பிரம்படி வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சண்முகராசா நேற்று (16.11.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், ராணி அவர்களின் அன்புக் கணவரும், சிறிகாந்தன், தவறூபன், ஜெயசுதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சி.ஜெயலக்சுமி, த.சியாளினி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான இ.தங்கமலர், க.பாலகிருஷ்ணன், க.இராசரத்தினம் மற்றும் பா.இராசமலர், வே.சிவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காயத்திரி, சர்மிளா, லக்ஸ்மிகா, பிரணிதா, ருக்ஸனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2024) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

[illegible], பிரம்படி வீதி,
கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்
மனைவி, பிள்ளைகள்
077 600 2854, 077 754 5840

(CS/1854) J-1

## வீடு வாடகைக்கு

யாழ் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குண்டு

தொடர்புகளுக்கு:
077 833 6848

## விற்பனைக்கு

நல்ல இன வாழைக்குட்டிகள் (இதரை, கதலி, மொந்தன்) இடம்- அச்சுவேலி

தொடர்பு: 077 236 7848

## வீடுவாடகைக்கு

2 வீடுகள் வாடகைக்கு உண்டு. நல்லூர் கோவிலில் இருந்து 400m தொலைவில் ஒரு வீடு அமைந்துள்ளது. மற்றைய வீடு நல்லூரிலிருந்து 950m தொலைவில் அமைந்துள்ளது.
2 வீட்டுக்கும் 4 அறைகள் உண்டு

தொடர்பு: 077 306 8993

## நவீன கட்டில் விற்பனைக்கு

வசதிக்கேற்ப சரி செய்து பயன்படுத்தக் கூடியதும், அதி சிறந்த நிலையிலுள்ளதும், 3 மாதங்களே பாவிக்கப்பட்டதுமான, கட்டில் ஒன்று விற்பனைக்குள்ளது

தொடர்புகளுக்கு:
077 078 0240

## வீட்டு வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் குடும்பம் ஒன்றிற்கு வீட்டு வேலைகளை செய்வதற்கு வீட்டு வேலையாள் தேவை. அனுபவமுள்ள பெண்கள் விரும்பத்தக்கது.
கவர்ச்சிகரமான சம்பளம், தங்குமிடம், உணவு, போக்குவரத்து வசதிகளும் உண்டு.

தொடர்புகளுக்கு:
077 258 5564

## விற்பனைக்கு

யாழ் நகரில் உள்ள வர்த்தக நிலையத்தின் அலுமினிய பிற்றிங் றக்கைகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
077 991 1025

## விற்பனைக்கு

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக இல. 174 கடை உடன் விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு:
077 723 2535

## வேலை வாய்ப்பு

யாழ் நகரில் அமைந்துள்ள ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் மற்றும் சமுத்திரா ரேடர்ஸ் (Hard Ware) நிறுவனங்களுக்கான வேலை வாய்ப்பு. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு:
077 077 6469 , 077 494 9683

## வகுப்புக்கள்

தரம் 01 முதல் 05 வரையான மாணவர்களுக்கு தமக்கு பொருத்தமான இடத்தில் குழுவாகவும் தனியாகவும் கற்பிக்கப்படும். சிங்கள மொழியும் கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
077 033 4076

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கணக்காளர் தேவை

யாழ்நகரில் இயங்கிவரும் பிரபல Electrical Hardware நிறுவனமொன்றிற்கு முன் அனுபவமுள்ள பட்டதாரி கணக்காளர் (Accountant) தேவை. பெண்கள் விரும்பத்தக்கது

**076 527 3986**

## வாடகைக்கு

கடை - கஸ்தூரியார் வீதி
மேல்மாடி பில்டிங் - நாவலர் வீதி 2700 ச.அடி
நாற்சார் வீடு - கந்தர்மடம்
கம்பனி நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:- 076 071 2676, 077 665 9736, 021 222 3479


## ஆதனவரி வருமான சேகரிப்பிற்கான நடமாடும் சேவை தொடர்பான அறிவித்தல்

எமது சபையின் ஆளுகைக்குட்பட்ட பளைநகரம், புலோப்பளை மேற்கு, கச்சார்வெளி ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கி பளை நகர வட்டாரத்திற்கான 2024 ஆம் ஆண்டு நான்காம் காலாண்டுக்கான ஆதனவரி அறவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. அந்தவகையில் குறித்த வட்டாரத்தின் ஆதன வரிவருமான சேகரிப்பினை மேற்கொள்ளும் பொருட்டு பெரியபளை சனசமூக நிலையம், புலோப்பளைமேற்கு கிராம சேவையாளர் அலுவலகம், கச்சார்வெளி கிராமசேவையாளர் அலுவலகம் ஆகிய இடங்களில் நடமாடும் சேவை ஒன்றினை எதிர்வரும் 19.11.2024 ஆம் திகதி காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.00 வரை நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே குறித்த நடமாடும் சேவையில் பளைநகர வட்டாரத்தில் அமைந்துள்ள அனைத்து ஆதன உரிமையாளர்கள் அல்லது பராமரிப்பாளர்கள் தங்கள் ஆதனங்களுக்கான வரியினை செலுத்துமாறு கேட்டுக்கொள்வதுடன் இதுவரை ஆவணங்களை சமர்ப்பிக்காத ஆதன உரிமையாளர்கள் தங்கள் ஆதனங்களுக்கான உறுதி, 30வருட தோம்பு, மற்றும் நிலஅளவைப்படம் அடையாள அட்டை ஆகியவற்றின் நிழற்பிரதிகளை சமர்ப்பிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன். அத்துடன் ஆதனவரி அறவீடு தொடர்பான மேலதிக தகவல்களை நேரடியாகவும் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

த.தர்சினி,
செயலாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,பளை.

(CR/43720) J-1

## திருத்தி வாசிக்கவும்

இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 96 ஆயிரத்து 975 வாக்குகளையும், தேசிய மக்கள் சக்தி 55 ஆயிரத்து 498 வாக்குகளையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 40 ஆயிரத்து 139 வாக்குகளையும் பெற்றுள்ளன.

உதயனின் தேர்தல் சிறப்பிதழில் மட்டக்களப்புத் தொகுதியின் முடிவுகள், மட்டக்களப்பு மாவட்ட முடிவுகளாக தவறுதலாகப் பிரசுரமாகியுள்ளது. (ம)


## காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் தெற்கில் 2 பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை.
நேரடித் தொடர்புகளுக்கு :
**077 469 2981**

(CS 1651) P-1

## பிளம்பர் தேவை

யாழ்நகரில் இயங்கி வரும் பிரபல கட்டட நிறுவனம் ஒன்றிற்கு பிளம்பர் தேவை.

**076 527 3986**

## விற்பனை முகவர் தேவை

யாழ் நகரில் இயங்கிவரும் பிரபல Electrical Hardware நிறுவனமொன்றிற்கு முன்அனுபவமுள்ள விற்பனை முகவர் தேவை.

தொடர்பு:- **076 527 3986**

(CS/56691) J-1


## குருதிக் கொடை

யாழ்ப்பாணம், நவ. 17

உடுவில் கிழக்கு கற்பக விநாயகர் சனசமூக நிலையம் நடத்தும் குருதிக்கொடை முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை உடுவில் கிழக்கு கற்பக விநாயகர் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ம-66)


## வீடு, காணி விற்பனைக்கு

கருவேலடி லேன் (கொக்குவில் கிழக்கு) 1.25 பரப்புக் காணியுடன் கூடிய புது வீடு (கொக்குவில் இந்துக்கல்லூரி பாடசாலைக்கு அருகாமையில்) விற்பனைக்குண்டு.

077 855 3479, 077 923 4242

## வீடு, காணி விற்பனைக்கு

- கொட்டைக்காடு லேன் (கோண்டாவில்) 4 அறை, கராச், சுற்றுமதிலுடன் கூடிய 4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
- 6.5 பரப்பு வெறும் காணி சுற்றுமதிலுடன் விற்பனைக்குண்டு.

077 855 3479, 077 923 4242

## காணி விற்பனைக்குண்டு

மருதனார் மடம் உரும்பிராய் வீதி- 2, 1 3/4 பரப்பு,
1 பரப்பு- 40 லட்சம்.
திருநெல்வேலி நாவலடி வீதி- 1 பரப்பு 5.36 குளி

தொடர்பு: 077 104 8865


உ
குகமயம்




# விவாஹ சுபமுகூர்த்தப் பத்திரிகை

**அநேக நமஸ்காரங்கள் / ஆசீர்வாதம் / உபயக்ஷேமம்**

**ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான குரோதி வருஷம் கார்த்திகை மாதம் 05ஆம் நாள் (20.11.2024) புதன்கிழமை பஞ்சமி திதியும் புனர்பூச நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய காலை 08:11 மணி முதல் 10.10மணி வரையுள்ள தனுர்லக்ன சுபமுகூர்த்த வேளையில்**

அராலி வண்ணபுரம் சிவன் கோவில்
காஸ்யப கோத்திரம்
கங்காதரக்குருக்களின் நப்திரியும்
சிவசுப்பிரமணியக் குருக்களின் பௌத்திரியும்
சிவகணேசக் குருக்கள் ஸ்ரீமதி அமிர்தாம்பாள்
தம்பதியினரின் கனிஷ்ட புத்திரியுமான
**சௌபாக்யவதி - சியாமளஜனனி**
B.Eng|(Hons)
என்கிற வதுவை



சிவஸாயுஜ்ய ஷண்முகநாதக்குருக்கள் சிவஸாயுஜ்ய நகுலேஸ்வரி அம்மாளின் பௌத்திரனும் சிவஸாயுஜ்ய சோமஸ்கந்தக் குருக்கள் - ஸ்ரீமதி நாகேஸ்வரி அம்மாளின் தௌஹித்திரனும் மாவை ஆதீனம் மஹாராஜஸ்ரீ இரத்தினசபாபதிக்குருக்கள் - ஸ்ரீமதி கலாவதி தம்பதியினரின் ஏகபுத்திரனுமாகிய மாவையாதீன இளவரசு, சிவாகம பாஸ்கர.
**சிரஞ்சீவி - ஞானஸ்கந்த ஸர்மா**
BSc MBA.
என்கிற வரனுக்கு

கன்னிகாதான திருமாங்கல்ய தாரண பாணிக்கிரஹணம் செய்வதாய் கீரிமலை நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரர் கிருபையாலும் மாவிட்டபுரம் மாவையாதீனம் ஸ்ரீ கந்தசுவாமியார் அனுக்கிரகத்தாலும் வண்ணபுரம் (அராலி) விசாலாக்ஷி அம்பிகாதேவி சமேத விஸ்வநாதர் சுவாமியார் அனுக்கிரகத்துடன் மேற்படி சுபமுகூர்த்தம் பெரியோர்களால் நிச்சயிக்கப் பெற்று **மருதனார் மடம் "சமுத்திர மஹால்"** திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் இஷ்டமித்திர பந்துக்களுடன் குடும்பஸகிதம் முன்னதாகவே வந்திருந்து சுபமுகூர்த்தத்தை நடாத்தி வைத்து தம்பதிகளை ஆசிர்வதித்து எங்களையும் கௌரவிக்க வேணுமாய் கேட்டுக்கொள்கிறோம்.


**சமாவர்த்தனம் அதிகாலை 05:00 மணி முதல் மணமகன் இல்லத்திலும்**

**வரவேற்பு உபசாரம் 21-11-2024 வியாழக்கிழமை மாலை 05:00 மணிமுதல் மணமகன் இல்லத்தில் நடைபெறும்.**


இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தங்கள் அன்புள்ள
சிவஸ்ரீ. சி. சிவகணேசக்குருக்கள்
அமிர்தாம்பாள் தம்பதிகள்
வண்ணபுரம் சிவன்கோவில்,
அராலி மத்தி, வட்டுக்கோட்டை.
077 933 8104

தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்



[இரு வீட்டார் அழைப்பு]



தங்கள் அன்புள்ள
மஹாராஜ ஸ்ரீ.து.ஷ. இரத்தின சபாபதிக்குருக்கள்
ஸ்ரீமதி. கலாவதி
ஸ்ரீ கந்தசுவாமி கோவில், மாவை ஆதீன பேரரசு,
மாவிட்டபுரம், தெல்லிப்பளை.
021 224 3334

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதிக்கு அருகாமையில் **4 பரப்புக் காணியும்**, 4 அறைகளுடன் கூடிய **வீடும் விற்பனைக்கு உண்டு.**
தரகர் தொடர்புகொள்ள வேண்டாம்.

தொடர்பு:- **077 368 6186**

(CS/56682) J-1

## மணமகள் தேவை

யாழில் தனியார் நிறுவனத்தில் நல்ல பதவியிலுள்ள 1986 ஆம் ஆண்டு பிறந்த மணமகனுக்கு (விஸ்வகுலம்) பெற்றோர் நற்குணமுள்ள மணமகளை எதிர்பார்க்கின்றனர்.

**077 612 9051**

(28740) (N-1)

## வீடு வாடகைக்கு

மானிப்பாய். சங்குவேலியில். மானிப்பாய் Tcwn இல் இருந்து 1Km தூரத்தில் 3 அறைகள்.
Hall, Kitchen, Parking with all furniture உடனான வீடு வாடகைக்கு உண்டு.
Holi Day Home ற்கும் உகந்தது.
ஞாயிற்றுக்கிழமைகளில் மாத்திரம் தொடர்பு கொள்ளவும்.

**077 734 3111**

(CR/43716) J-1

## இணைப்ப இணையத்தளம் வழங்கும் அடுத்த தலைமுறை திருமண சேவை

தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு அறிமுகமாகின்றது இணைப்ப நவீன திருமண சேவை. ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி, தொடர்பு கொண்டு உங்கள் துணையை தெரிவுசெய்யமுடியும்.
பதிவுக் கட்டணம் இல்லை இப்பொழுதே இணையுங்கள் இணைப்பவுடன்

**Ts&Cs apply**
**Www.inaipa.com**

(CS/56684) J-1

## சிறிய வீட்டுடன் காணி விற்பனைக்கு

கே.கே.எஸ். வீதி, கொக்குவிலில் 1 பரப்புக் காணி சிறிய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

**076 039 2163**

(CS/1851) J-1

## THE ROYAL COLLEGE OF JAFFNA

தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை
சுலபமாக குறுகிய காலத்தில் இலக்கணப் பிழையின்றி ஆங்கிலத்தில் கதைக்கப் பயில
By ந.விக்னேஸ்வரன் ஆச்சார்யார்.
குபேரன் கட்டடமாடி, சங்கானை நகர்

**Tel. 077 675 1649**

(CS/56678) J-1

## மணமகள் தேவை

**1975, இந்து, ஹஸ்தம், MANAGER**
**பூர்வீகம் - மூளாய், வதியுமிடம் - CANADA**
**மணமகன் பதிவு இல: 11155.**
**தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.**
**இணையவழி திருமணசேவை.**
**அழையுங்கள் 076 664 9401**

**www.EQMarriageService.com**

(CS/29269B) J-1

## மணமகன் தேவை

**1991, இந்து, உத்தராடம், LECTURER**
**பூர்வீகம் - யாழ்ப்பாணம், வதியுமிடம் - கொழும்பு**
**மணமகள் பதிவு இல: 11191.**
**தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.**
**இணையவழி திருமணசேவை.**
**அழையுங்கள் 076 664 9401**

**www.EQMarriageService.com**

(CS/29269A) J-1


## திடீர்...

வவுனியா சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த அவர், கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் திடீர் சுகவீனமுற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். இந்த நிலையிலேயே அவர் நேற்று உயிரிழந்துள்ளார். (அ-ம-19)

## எம்.பி.க்கள்...

வர்த்தமானியே இவ்வாறு வெளியிடப்பட்டுள்ளது. இதேவேளை தங்களது கட்சியின் சார்பில் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்படவுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களைக் கட்சிகள் விரைவில் அறிவிக்கவேண்டும். அதன் பின்னர் 29 தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய வர்த்தமானி, தேர்தல்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்படும். (அ-ம-இ)

## கொள்கை...

ரீதியாக ஆரம்பித்து வைக்கவிருக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, புதிய அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன உரையை நிகழ்த்தவுள்ளார். இதற்கமைய பிற்பகல் 3 மணிக்கு ஜனாதிபதி வைபவ ரீதியாக முதலாவது அமர்வை ஆரம்பித்து வைக்கவிருப்பதுடன் அதைத் தொடர்ந்தே கொள்கைப் பிரகடன உரையை நிகழ்த்தவுள்ளார். (அ-ம-44)


## மன்னார் மாவட்ட கூட்டுறவு சபையின் கட்டட அபிவிருத்தி நிதிக்கான அதிர்ஸ்டலாப சீட்டிழுப்பு - 31.10.2024

மேற்படி எமது கூட்டுறவு சபை கட்டட அபிவிருத்தி நிதிக்கான அதிர்ஸ்டலாப சீட்டிழுப்பானது 31.10.2024 ஆம் திகதி மன்னார் நகர பஸ் நிலையத்திற்கு முன்பாக பிற்பகல் 5.00 மணிக்கு நடைபெற்றது. அதன் முடிவுகள் பின்வருமாறு:

▲ **1 ஆம் பரிசு** : 11729 — **த. அகர்ஷினி**, நக்கீரன் வீதி, அல்வாய் வடக்கு, யாழ்ப்பாணம்.

▲ **2 ஆம் பரிசு** : 20157 — **பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம்**, பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம்.

▲ **3 ஆம் பரிசு** : 5279 — S.K.S, பேசாலை, மன்னார்.

**ஆறுதல் பரிசு :**

| | | | |
|---|---|---|---|
| ▲ 01. | 8552 | ▲ 06. | 8786 |
| ▲ 02. | 20672 | ▲ 07. | 12592 |
| ▲ 03. | 20124 | ▲ 08. | 4177 |
| ▲ 04. | 9861 | ▲ 09. | 02493 |
| ▲ 05. | 19569 | ▲ 10. | 02971 |

**தகவல்: மாவட்ட கூட்டுறவு சபை, மன்னார்,**
**தொடர்பு: 077 070 1202**

(cr.43715) (N-1)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**பேராசிரியர்.சோ.கிருஷ்ணராஜா நினைவுப்பேருரை – 2024**

பேருரைத் தலைப்பு :
**"ஆனந்த கெ.குமாரசுவாமியின் கலை, அழகியல் பற்றிய நோக்குநிலையில் இலங்கையின் தாக்கம்"**

பேருரை வழங்குனர்:
**கலாநிதி. ஜனிஸ் லியஸ்கோ, இணைப் பேராசிரியர், ரெக்சஸ் பல்கலைக்கழகம்,ஒஸ்ரின், ஐக்கிய அமெரிக்கா.**

**திகதி** : 18.11.2024 (திங்கட்கிழமை)
பி.ப 3.00 மணி

**நிகழ்விடம்** :
நூலகக் கலையரங்கம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

## மரண அறிவித்தல்

பிறப்பு
11 . 06 . 1968



இறப்பு
15 . 11 . 2024

**அமரர் அந்தோனிமுத்து றொபின்சன்**

**(ஓய்வுநிலை மதுவரி உத்தியோகத்தர் - சாஜன்ட்)**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் தற்போது சொலமன் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட அந்தோனிமுத்து றொபின்சன் அவர்கள் நேற்றுமுன்தினம் (15.11.2024) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிமுத்து - பாக்கியவதி (மல்லிகா - யாழ்ப்பாணம்) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கதிர்காமன் மற்றும் - வசந்தமாலா தம்பதியரின் அன்பு மருமகனும், ஜனனி அவர்களின் பாசமிகு கணவரும், சிவசங்கரி, சிவகஸ்தூரி, காலஞ்சென்ற சிவகௌரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், வனஜாவின் (கரும்பு) அன்புச் சகோதரரும், தட்சனாமூர்த்தி (வருமான பரிசோதகர் - திருகோணமலை) மைத்துனரும், லாவன்யன் (சவுதிஅரேபியா), காலஞ்சென்ற தினேஸ்குமார் (கௌதம்), கீர்த்தனா ஆகியோரின் அனபு மாமனும், தாரிணி, செந்தூரன் (ஜேர்மன்), யாழினி (ஜேர்மன்), சர்பானந்தன் (ஆசிரியர் - யா/ சென்ஜேம்ஸ் மகா வித்தியாலயம்), சுதர்சினி (ஜேர்மன்), பரஞ்சோதி (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கேதாரன், சிவன்யா, ரஜிந்தன், கஜாலன், வேணுஜன், ஹன்சிகா ஆகியோரின் பெரிய தந்தையும், கௌசிகனின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2024) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**077 086 9838**

**சொலமன் வீதி, யாழ்ப்பாணம்.**

(CS/56667) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழருக்குத்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழ் மக்கள் மத்தியில் தேசிய மக்கள் சக்தி தொடர்பில் தவறான கருத்துகள் பரப்பப்பட்டன. இனவாதம் தூண்டப்பட்டது. எனினும், நாம் சகோதரத்துவத்துடன் பழகினோம். அதனால்தான் வடக்கு - கிழக்கில் உள்ள மக்கள், அங்குள்ள பாரம்பரியக் கட்சிகளை நிராகரித்து எமது தோழமையை ஏற்றுள்ளனர்.

நாடாளுமன்றத் தேர்தலில் எமக்கு கிடைக்கப்பெற்ற மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தை விடவும் வடக்கில் இரு தேர்தல் மாவட்டங்களையும் வென்று தமிழ் மக்களின் நம்பிக்கையை பெற்றுள்ளமை பெரும் பலமாகும். அந்த நம்பிக்கையை நிச்சயம் நாம் பாதுகாப்போம்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் கிடைக்கப்பெறவில்லை. தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகள் தீரவில்லை. மாகாணசபை முறைமையென்பது சாதகமானது அல்ல. எனவே, தமிழர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தக்கூடிய பொறிமுறையை நாம் உருவாக்கவேண்டும். அதுவரை மாகாணசபை முறைமை இருக்கும். அது இல்லாதொழிக்கப்படமாட்டாது. நியாயமான தீர்வு முன்வைக்கப்படும்வரை மாகாணசபை முறைமை நீக்கப்படமாட்டாது" - என்றார். (அ-ம-44)

## தேசியப்...

சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றத் தேர்தலில் எமது ஜனநாயக தமிழரசுக் கூட்டமைப்புக்கு கணிசமான வாக்குகள் கிடைத்துள்ளன. மிக விரைவில் ஜனநாயக தமிழரசுக் கூட்டமைப்பு புதிய கட்சியாக மலரும். அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்த சுமந்திரன் தேசியப் பட்டியலில் வருவதற்குத் தான் விரும்பவில்லை என்றும், எனினும் மத்திய குழுவின் முடிவுக்குக் கட்டுப்படுவேன் எனவும் கூறியுள்ளார். இதுதான் இவர்களின் கபடத்தனம். நாடாளுமன்றத் தேர்தலில் தோக்கும் ஒருவர் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்குச் செல்லக்கூடாது என்ற முடிவு எப்போதே எடுக்கப்பட்டது. தற்போது அந்த முடிவுக்கு மாறாகச் செயற்பட எத்தனிக்கின்றனர். ஏனெனில், தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவில் உள்ள பலர் சுமந்திரனின் ஆலோசனைப்படியே செயற்படுகின்றனர். எனவே அவர்கள் சுமந்திரனை தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வாய்ப்புகள் அதிகம்.

இவ்வாறுதான் இவர்கள் கேலிக்கூத்தாடுகின்றனர். அவர்களை கேள்வி கேட்க உயர் தலைமைகள் முன்வருவதில்லை. பதில் செயலாளர் சுமந்திரனின் எண்ணப்படி செயற்படுபவர். எனவே, அனைத்தையும் சாதகமாகப் பயன்படுத்தி தான் எதையெல்லாம் நினைக்கின்றாரோ, அதையெல்லாம் சுமந்திரன் செயற்படுத்துகின்றார்.

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவில் அங்கம் வகிப்பவர்களுக்கு ரோச நரம்பு இருந்தால், அவர்கள் மக்களால் தூக்கி வீசப்பட்டவர்களை தேசியப்பட்டில் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராக அனுமதிக்கக்கூடாது. அப்படி எவராவது சுமந்திரனை முன்மொழிந்து வழிமொழிந்தால் அவர்கள் மக்களிடம் காட்டிக்கொடுக்கப்படுவார்கள். அத்துடன் இந்த முடிவுக்கு எதிராகப் பல போராட்டங்கள் நடக்கும்.

மத்திய குழு என்று அடிக்கடி கூறிக் கொள்ளும் சுமந்திரன், மத்திய குழு தந்தாலும் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ஏற்கமாட்டேன் என்று அறிக்கை விட முடியுமா? என்றும் சரவணபவன் கேள்வி எழுப்பினார். (அ-ம)

## 22 ஆம்...

தெற்கே காற்றுச் சுழற்சி ஒன்று உள்ளது. அத்துடன் அரபிக் கடலிலும் காற்று சுழற்சி ஒன்று உள்ளது. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் வடகீழ்ப் பருவமழையும் தீவிரமடைந்துள்ளது. இவற்றின் காரணமாக அடுத்த சில நாட்களுக்கு குறிப்பாக எதிர்வரும் 22ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளுக்கும் அவ்வப்போது மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளிலும் நிலம் நிரம்பு நிலையை எட்டியுள்ளது. அத்துடன் தொடர்ச்சியாக மழையும் கிடைத்து வருகின்றது. குறிப்பாக 19ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் அவ்வப்போது கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. இதனால் தாழ்நிலப் பகுதிகளில் மழை நீர் தேங்கி நிற்கும் வாய்ப்புள்ளது. எனவே தாழ்வான பகுதிகளில் உள்ள மக்கள் வெள்ள அனர்த்தம் தொடர்பில் அவதானமாக இருப்பது அவசியம்.

வடகீழ்ப் பருவமழையின் தீவிரத் தன்மையினை இனிவரும் வாரங்களில் அனுபவிக்க முடியும். நான் முன்னரே குறிப்பிட்டது போன்று நவம்பர் மாதத்தின் 18 நாட்கள் மழை நாட்களாக இருக்கும் என்பது மீளவும் குறிப்பிடக்கூடியது. தொடர்ச்சியாக எதிர்வரும் 23ஆம் திகதியளவில் வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது. அது எதிர்வரும் 26 மற்றும் 27ஆம் திகதிகளில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு அண்மித்த பகுதிகளுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தத் தாழமுக்கம் தொடர்பான மேலதிக விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் - என்றார். (அ-ம-66)

## நவம்பர்...

செங்கோல் வைக்கப்பட்ட பின்னர் நாடாளுமன்றம் கூட்டப்படவேண்டிய நாள் மற்றும் நேரம் அடங்கிய ஜனாதிபதியின் அறிவிப்பு வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தால் வாசிக்கப்படுவது முதலாவது விடயமாகச் சபையில் முன்னெடுக்கப்படும்.

அதன்பின்னர் அரசமைப்பின் உறுப்புரை மற்றும் நிலையியற் கட்டளை இலக்கம் 4, 5 மற்றும் 6 ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபாநாயகரை வாக்களிப்பின் மூலம் நியமித்தல், சபாநாயகர், நாடாளுமன்ற உறுப்பினர்களின் உறுதியுரை வழங்கப்படும். இதனையடுத்துப் பிரதிச் சபாநாயகர், குழுக்களின் தலைவர் மற்றும் குழுக்களின் பிரதித் தவிசாளர் ஆகியோர் வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

பத்தாவது நாடாளுமன்றத்துக்குப் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு நாடாளுமன்ற முறைமை தொடர்பாக மூன்று நாட்கள் செயலமர்வை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த செயலமர்வு எதிர்வரும் 25, 26 மற்றும் 27ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளதாக அரசமைப்புச் சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் 18ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. குறித்த பணிகள் காரணமாக எதிர்வரும் 18ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை நாடாளுமன்ற ஊழியர்களின் விடுமுறை ரத்துச் செய்யப்பட்டுள்ளது. (அ-ம-66)

## நாடாளுமன்றத்தில்...

மன்ற உறுப்பினர்களாகக் காணப்படுகின்றனர் எனக் கூறப்படுகின்றது.

ஐக்கிய மக்கள் சக்திக்கு கிடைக்கப்பெற்றுள்ள 40 ஆசனங்களில் 6 பேர் முதன்முறையாக சபைக்கு வருகின்றனர். இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் நான்கு புது முகங்களும், பெரமுனவின் சார்பில் ஒருவரும், யாழில் சுயேச்சைக் குழு சார்பில் ஒருவரும் முதன்முறையாக சபைக்குத் தெரிவாகியுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியில் இருந்தே பெரும்பாலான புதுமுகங்கள் சபைக்குத் தெரிவாகியுள்ளனர். மாவட்ட தலைவர்களாக இருந்தவர்களில் சிலரே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்துள்ளனர். அதுவும் அவர்கள் கடந்த முறை சபையில் அங்கம் வகிக்கவில்லை. மூவர் மாத்திரமே சபையில் இருந்தனர். (அ-ம-44)

அண்ணா
பொதிகள் சேவை
976, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
குறைந்த கட்டணம்
நம்பிக்கையான சேவை
யாழ்ப்பாணம் - சங்கானை - நெல்லியடி - கைதடி - கிளிநொச்சி - வவுனியா
075 330 5500
076 122 1566
021 221 5656

மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு
Supercup 90(லான்சர்)
மோட்டார் சைக்கிள்
விற்பனைக்கு உண்டு.
077 436 9204
(CS/56693) J-1

வேலைக்கு ஆள் தேவை
திருநெல்வேலியில் அமைந்துள்ள 4 பேர் கொண்ட குடும்பத்திற்கு வீட்டு வேலைக்கு ஆள் தேவை (பெண்) ஆருகில் இருப்பவர் விரும்பத்தக்கது. சம்பளம் நாள் ஒன்றுக்கு 1500/-
தொடர்புகளுக்கு:
077 789 8862

காணி விற்பனைக்கு
நெல்லியடிலேன், கொக்குவில் கிழக்கு ஒழுங்கை முகப்புடன் சாயிதுர்க்கா ஆலயத்தில் இருந்து 40 m தூரத்தில் 5 பரப்பு சதுரக்காணி விற்பனைக்குண்டு.
077 190 9253

காணி விற்பனைக்கு
- யாழ்ப்பாணம் கைதடியில் 18 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. A9 வீதி முகப்புடன் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்.
- பார்வையிடும் நேரம் காலை 6.00 - மாலை 6.00
- தரகர் தேவையில்லை
- 20 அடி பாதையுடன்
- 1 பரப்பின் விலை 23 லட்சம் ரூபா

076 755 8606, 070 168 3354, 070 668 3354

யாழ்ப்பாணம் உரும்பிராயில் 20 நிலப்பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. செல்லத்துரை வீதி முகப்புடன்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- உரும்பிராய் சந்தி 750m தூரம்
- உரும்பிராய் சந்தியில் இருந்து கோப்பாய் செல்லும் பிரதான காப்பற் வீதி 250m தூரம்
- தண்ணீர் ஊற்று, செம்மண் நிலம், நல்லசூழல்
- 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை 15 லட்சம்

பார்வையிடும் நேரம் காலை 6.00 - மாலை 6.00 வரை
077 288 0152, 076 739 0413

யாழ்ப்பாணம் உரும்பிராய் மருதனார்மடம் செல்லும் பிரதான காப்பற் வீதியில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் 14 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
- ஒரு பரப்பின் விலை 21 லட்சம் ரூபா மட்டும்.
- உரும்பிராய் சந்தி 1 கிலோமீற்றர் தூரம்

076 436 5814, 077 468 3354

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 31 . 01 . 1945

மறைவு 17 . 10 . 2024

கடந்த 17.10.2024 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## சுப்பிரமணியம் வீரசிங்கம்

(ஓய்வு நிலை அதிபர்)

அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், மதியபோசன நிகழ்வும் இன்று (17.11.2024) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் **துர்க்கா மணி மண்டபத்தில் (நல்லூர் ஆலய பின் வீதி)** நடைபெறவுள்ளதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக
ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும், முகநூல், மின்னஞ்சல், RIPBOOK ஆகியவை மூலமாகவும், எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இல.10, கோணாவளை வீதி,
கொக்குவில் கிழக்கு,
(உம் வட்டாரம், புங்குடுதீவு)**

**குடும்பத்தினர்
077 364 0579**

(cs.56651) (N-1)

# மரண அறிவித்தல்



பிறப்பு 21 . 01 . 1941

இறப்பு 13 . 11 . 2024

## இராமலிங்கம் கதிரவேற்பிள்ளை

(வைரவநாதர்)

வேலணை வடக்கு, சோளாவத்தையைப் பிறப்பிடமாகவும் குமாசாமிபுரம் 12 ஆம் கட்டை விசுவமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் கதிரவேற்பிள்ளை கடந்த 13.11.2024 புதன்கிழமை விசுவமடுவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - ஞானம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பராசக்தி மற்றும் சதாசிவம்பிள்ளை, சிவகொழுந்து, பாலசுப்ரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கலையரசி, கலைவண்ணன், வைதேகி, காலஞ்சென்ற ஜெயகாந்தன் மற்றும் உமாமகேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலகிருஷ்ணன், அனுஜா, ராஜ்குமார், அனுஷா ஆகியோரின் அன்பு மாமனாரும், புவனிகா, தனுஷான், தனஞ்சன், தர்ணிகா, யோதிகா, லோஜிகா, நிசாந்தன், ஆஷவி, ஆஹவி, ஆரன் (பிரனித்) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா, இரத்தினாம்பிகை, அருளானந்தம், கோமலர், கந்தசாமி, மகாலட்சுமி, மகேஸ்வரி மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், இராசநாதன், அமிர்தலிங்கம், காலஞ்சென்ற சோமசுந்தரம் ஆகியோரின் சகலனும், காலஞ்சென்ற மதிவதனியின் உடன்பிறவாச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கோபாலபிள்ளை, பராசக்தி, சோமசுந்தம் மற்றும் புவனேந்திரா, காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி, தனலட்சுமி மற்றும் தனபாலசிங்கம், கனேஸ்வரி ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (17.11.2024) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, 8.00 மணியளவில் அவரது பிறப்பிடமான வேலணைக்கு அன்னாரின் பூதவுடல் எடுத்துச்செல்லப்பட்டு அவரது இல்லத்தில் பிற்பகல் 1.00 மணியளவில் பார்வைக்கு வைக்கப்பட்டு பிற்பகல் 3.00 மணியளவில் தகனக்கிரியைக்காக வீரன்புட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அயலவர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

**குமாரசாமிபுரம்,
12 ஆம் கட்டை விசுவமடு,**

தகவல்:
**குடும்பத்தினர்
076 059 0311**

(cs56677 (N-1)

## வேலைக்கு ஆள் தேவை

திருநெல்வேலியில் அமைந்துள்ள 4 பேர் கொண்ட குடும்பத்திற்கு வீட்டு வேலைக்கு ஆள் தேவை (பெண்) ஆருகில் இருப்பவர் விரும்பத்தக்கது. சம்பளம் நாள் ஒன்றுக்கு 1500/-

தொடர்புகளுக்கு:
**077 789 8862**

## SPOKEN & GRAMMAR ENGLISH CLASSES

GRADE 7 TO GCE O/L,
ADVANCED LEVEL, GRADUATES

தொழில் புரிவோர் பேசப்பழக சிறந்த வகுப்புகள்
யாழ் இந்து வீதியில்

K.Ganesh B.A **077 766 8725**

## வீடு/கடை வாடகைக்கு தேவை

யாழ்ப்பாண நகரில் அலுவலக பாவனையுடன் கூடிய வாகன தரிப்பிட வசதி கொண்ட தங்குமிட வசதியுடைய வீடு / கடை வாடகைக்கு தேவை.
உடன் தொடர்பு கொள்ளவும்.

**077 296 0787 / 077 611 0185**

(cs.56667) (N-1)

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணம், நல்லூர், திருநெல்வேலி, கல்வியங்காடு, கோப்பாய், இருபாலை ஆகிய இடங்களில் வீடு வாடகைக்குத் தேவை.

**077 919 1529**

(cs.56680) (N-1)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

பிரம்படிலேன் கொக்குவிலில்
2 பரப்பும், 2குளியும் கொண்ட வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.
(1 பரப்பாகவும் பிரித்துக்கொடுக்கப்படும்)
விலை - 340,00000/-

**077 247 4740**

# சிறுநீரகம் தேவை

**சிறுநீரகம் செயிழந்த ஒருவருக்கு O இரத்தவகையைச் சேர்ந்த சிறுநீரகம் அவசரமாகத் தேவை.
45 வயதிற்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.**

**077 540 6732, 077 723 8937**

(cs.56663) (N-1)

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி நெய்தல் நகருக்கு அருகாமையில் 60 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

**நிலப்பரப்பு**

- ▲ 20 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ▲ 2 ஆண்டுகள் பூர்த்தியான தென்னங்கன்றுகள் உள்ளன.
- ▲ 2 பரப்புள்ள துண்டு ஒன்றுக்குள் 6 தொடக்கம் 10 வரையான தென்னங்கன்றுகள் உள்ளன.
- ▲ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்.
- ▲ அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்.

**ஒரு பரப்பின் விலை**

- ▲ நெய்தல் நகர் பிரதான வீதியை முகப்பாக கொண்ட காணித்துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்
- ▲ கடற்கரையை (**Beach**) முகப்பாக கொண்ட காணித்துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்
- ▲ 20 அடி பாதையை முகப்பாக கொண்ட காணித் துண்டுகள் அனைத்தும் **9,75000** ரூபாய் மட்டுமே
- ▲ தரகர் தேவையில்லை
- ▲ பார்வையிடும் நேரம் -
  காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை

**தொடர்பு: ஜெயம்**
**077 814 7389**
**077 986 5457**

(cs.56628) (P-1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.11. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08


# சஞ்சீவி

Registered as a Newspaper

நெருப்பழல் சேர்ந்தக்கால் நெய்போல் வதூஉம்
எரிப்பச்சுட் டெவ்வநோய் ஆக்கும் – பரப்பக்
கொடுவினைய ராகுவர் கோடாரும் கோடிக்
கடுவினைய ராகியார்ச் சார்ந்து.

– நாலடியார்

மலை : 33 | வள்ளுவர் ஆண்டு : 2055 | கார்த்திகை 02 | ஞாயிற்றுக்கிழமை (17.11.2024) | சிகரம் :228



## நாடாளுமன்றத் தேர்தல் 2024:

# தமிழ்க் கட்சிகள்

## விளங்கிக்கொள்ளவேண்டிய எளிமையான பேருண்மைகள்

○ நிலாந்தன்

தமிழ்த்தேசியப் பிரதிநிதித்துவம் படிப்படியாகக் குறைவதைத் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. கடந்த நாடாளுமன்றத்தில் 13 ஆசனங்கள். இந்த முறை பத்து ஆசனங்கள். மருத்துவர் அர்ச்சுனாவின் அரசியல் நிலைப்பாடுகள் ஸ்திரமானவை அல்ல. எனினும் அவரையும் இணைத்துக் கொண்டால் பதினொரு ஆசனங்கள். ஆனால் தமிழ்த் தேசியத் தரப்புக்குக் கிடைக்காத ஆசனங்கள் தமிழ்த்தேசிய பரப்புக்கு வெளியே போயிருக்கின்றன.


வடக்கில் மொத்தம் ஐந்து என்.பி.பி. வேட்பாளர்களும் கிழக்கில் இரண்டு என். பி. பி. தமிழ் வேட்பாளர்களும் வெற்றி பெற்றிருக்கிறார்கள். கடந்த நாடாளுமன்றத்தில் டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன் இருவரும் வடக்கிலிருந்தும், பிள்ளையான் கிழக்கில் இருந்தும் சென்றார்கள். மூன்று வேறு கட்சிகளைச் சேர்ந்த மூன்று தமிழ்ப் பிரதிநிதிகள். இப்பொழுது ஒரே தென்னிலங்கைக் கட்சியைச் சேர்ந்த ஏழு பேர். என்.பி.பி. இனப்பிரச்சினையைத் தீர்க்கும் என்று நம்பி தமிழ் மக்கள் அதற்கு வாக்களிக்கவில்லை. பிரதான தமிழ்த்தேசியக் கட்சிகள் தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டத் தவறியதன் விளைவே அது. தமிழ்ச் சமூகமானது ஒருவர் மற்றவரை நம்பாத, தன் பலத்தைத் தானே நம்பாத, ஒருவர் மற்றவரை சந்தேகத்தோடு பார்க்கின்ற, ஒருவருக்கு எதிராக மற்றவர் சூழ்ச்சிக் கோட்பாடுகளைப் புனைகின்ற, சமூகத்தில் மினுங்கிக்கொண்டு தெரியும் ஒருவரை சந்தேகத்தோடு வெறுப்போடு அணுகுகின்ற, வெறுப்பர்கள் அதிகம் நிறைந்த, கூட்டுணர்வு குறைந்த, தாய் நிலத்தை விட்டுப் புலம்பெயரும் வேட்கை மிகுந்த ஒரு சமூகமாக மாறி வருகின்றது.

அவ்வாறு தூர்ந்து கொண்டுபோகும் ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு தமிழ்த்தேசிய அரசியலுக்கு உண்டு. தன் பலம் உணர்ந்து ஒருவர் மற்றவரை நம்பிக்கையோடு பார்க்கின்ற, உருகிப்பிணைந்த ஒரு திரட்சியாக தமிழ் மக்களைத் திரட்டவேண்டிய பொறுப்பு தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு உண்டு.

ஆனால் தேசியவாத அரசியல் என்றால் மக்களைத் திரளாக்குவது தான் என்ற எளிமையான பேருண்மையை விளங்கிக் கொள்ளாத அல்லது அதை விளங்கிக் கொள்ளத் தேவையான பண்பாட்டு இத

07

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# அவசரமா ஒரு கடுதாசி



## பிரதமர் அம்மாவுக்கு....

வணக்கம்.

6 லட்சத்துச் சொச்சம் விருப்பு வாக்கு எடுத்து, பொம்பிளையளையாலையும் இப்பிடி வாக்குகளை எடுக்க முடியும் எண்டு எல்லாரும் மூக்குக்கு மேல விரலை வைக்கிறளவுக்கு வெண்டுகாட்டின உங்களுக்கு முதலில வாழ்த்துகள். இதுவரை இலங்கை வரலாற்றிலை பிரதமராக வந்த பொம்பிளையளெல்லாம் ஒரு அரசியல் பின்புலம், அரசியல் பின்பலம் உள்ள குடும்பத்திலை இருந்துதான் வந்தவை. சாதாரண குடும்பத்திலை இருந்து வரேலாமைப் போச்சு. எங்கடை கேடுகெட்ட அரசில் தளம் அப்பிடித்தான் இருந்து வந்திருக்கு. ஆனால் அந்த மரபை முறியடிக்கிற மாதிரி நீங்கள் வந்து சாதிச்சுக் காட்டியிருக்கிறியள்.

இதுவரை காலமும் "பெண் புத்தி பின் புத்தி.அவை ஆம்பிளையளைப் போலை ஆற்றல் இல்லாதவை"எண்டு அவையளை குசினிக்குள்ளை மடக்கி வைச்சிட்டினம்.அவையும் அடுப்பூதிக்கொண்டும் சீலை சட்டையளைத் தோச்சுக் கொண்டும் இருந்திருக்கினமேயொழிய தங்ளைப் பற்றியோ தங்கடை முன்னேற்றத்தைப் பற்றியோ சிந்தித்ததாத்தெரியேல்லை.

உங்கடை கட்சி செய்த அந்த இரண்டு வரலாற்று மாற்றங்களைப் பாராட்டாமல் இருக்கேலாது. ஒண்டு அம்பது வருசமா ஒரு மாற்றத்தைத் தேடிப் போராடி வந்தது உங்கடை கட்சி. மறைந்த உங்கடை கட்சி ஸ்தாபகர் தலைவர் ரோஹன விஜயவீரா "ஒரு இக்கட்டான அரசியல் சூழலிலை மக்கள் சலிப்படைஞ்சு போயிருக்கேக்கை எங்கடை கட்சியிலை இருந்து ஒரு ஆள் இந்த நாட்டைப் பொறுப்பெடுப்பார். அவர் வழமைபோலை இந்த நாட்டை ஆட்சிசெய்து கொண்டு வருகிற குடும்பச் சூழலிலை இருந்து வராமை ஒரு சாதாரண கிராமத்து மனிதராக இருப்பார்." எண்டு கனவு கண்டவர். அது போல அநுரவும் ஜனாதிபதியா வந்திட்டார். இப்ப என்னெண்டால் ஒரு நாளும் இல்லாத திருநாளா மூண்டில் ரண்டுக்கும் மேலால பெரும்பான்மையோட பார்லிமெண்டையும் பிடிச்சிட்டியள். இனி உங்கட காட்டில அடைமழைதான்.

இலங்கையிலை உள்ள சனத்தொகையிலை முக்காவாசி பொம்பிளையள் எண்டு கணக்கெடுப்புச் சொல்லுது. அப்ப ஏன் அரசியலுக்கை பொம்பிளையள் அதிகம் இல்லை? ஏன் வராமலிருக்கினம்? எண்டது ஒரு கேள்வி. சாதாரணமா பொம்பிளையள், பொம்பிளையளுக்குத் தங்கடை வோட்டைப் போட்டாலே ஈசியா கனக்கப் பொம்பிளையள் அரசியலுக்கை வந்திடுவினம். வராமல் இருக்கிறதுக்குரிய காரணங்களிலை ஒண்டு தாழ்வு மனப்பான்மை, கூச்ச சுபாவம். அரசியல் ஆண்களுக்குரியது எண்டும், தங்களாலை அரசியல் செய்ய ஏலாது எண்டும் அவையள் நம்பினம். சட்டரீதியா 25 வீதம் பெண்கள் இருக்க வேணும் எண்டு சட்டம் கொண்டு வந்தாலும் அதுக்குள்ளை சரியான ஆக்களை, அரசியல் தெரிஞ்சவையளைக் கொண்டு வரேலாமைப் போச்சு எண்டது எங்கடை கடந்த கால அனுபவம். போன உள்ளூராட்சி எலக்சனிலை வடிவா இதைக் கண்டனாங்கள்.

> எப்பவும் தமிழ் மக்கள் சிங்கள மக்களுக்கு எதிரி இல்லை. ஆனால் சிங்கள ஏகாதிபத்தியத்துக்கும் சிங்கள மேட்டுக்குடி அரசியல்வாதியளுக்கும் தமிழர் எப்பவும் எதிரிதான் எண்டதை மறக்காதையுங்கோ.

1970 களிலையும் அதுக்குப் பிறகும் நடந்த உங்கடை போராட்டத்திலை கன ஆம்பிளையளை அப்ப இருந்த அரசாங்கங்கள் கொண்டு குவிச்சுப்போட்டுதுகள். அதுபோலை எங்கட பக்கமும் அதே நிலைதான்.1983 இனக்கலவரத்தோடை தொடங்கின விளையாட்டு 2009 வரை நீடிச்சது. கடைசியா சர்வதேச அனுசரணையோடை போரைச் செய்தினம். அந்தப் போர் பெரிய இன அழிப்போடையும், இன ஒழிப்போடையும் நடந்து முடிஞ்சு போச்சுது. அதுக்குப் பிறகு வந்த அரசாங்கங்களெல்லாம் அந்தப் போரை வைச்சு அதிலை குளிர் காய்ஞ்சவையே ஒழிய போராட்டம் ஏன் துவங்கினது? எதுக்காகத் தமிழ்ப் பொடியள் துவக்கைக் கையிலை எடுத்தவை எண்ட வியாக்கியானத்தைச் சர்வதேசத்துக்கும் சொல்லேல்லை, சிங்களச் சனத்துக்கும் சொல்லேல்லை.

அதாலை பிரச்சினையை இழுத்தடிச்சு இந்த அளவுக்குக் கொண்டு வந்து விட்டிருக்கினம்.இதாலை நாடும் கெட்டுக் குட்டிச்சுவரானதுதான் மிச்சம். ஒண்டும் உருப்படியா நடக்கேல்லை.இனத் துவேசம் பேசிப் பேசி காலத்தைக் கடத்திப்போட்டினம். அதாலை கெட்டது தமிழ் குடியள் மாத்திரமில்லை சிங்கள மக்களும் தான். என்ன அதை வைச்சுக் கொண்டு கொஞ்சப்பேர் முதலாளியளாகிட்டினம்.

இதுக்குள்ளை ஒரு பகிடியை உங்களுக்குச் சொல்லத் தான் வேணும் ஒரு நாள் முன்னாள் ஜனாதிபதி ரணில் ஒரு அரசியல் வாதியோடை பேசிக்கொண்டிருக்கேக்கை பேச்சு வாக்கிலை கேட்டாராம் "உங்களுக்கு முதலிலை 13 ஐ அமுல் படுத்தினால் நல்லதோ? இல்லாட்டி பார்லிமென்ட் எலக்சனை வைச்சால் நல்லதோ?" எண்டு. அந்தத் தமிழ் அரசியல்வாதி கொஞ்சமும் கூச்சப்படாமல் "எங்களைப் பொறுத்தவரை ஒரு தீர்வைவிட பார்லிமென்ட் எலக்சன் தான் முக்கியம்." எண்டு பதில் சொல்லி இருக்கிறார். தமிழ் மக்களை தன்ரை தலையிலை தான் சுமக்கிறதா கனவு கண்டு இருக்கிறவருக்கு தீர்வு வரவேணும் எண்டதிலை என்ன அக்கறை இருக்கு? பிரச்சினையள் எப்பவும் அனல் கக்கி நெருப்பா இருக்கவேணும் எண்ட அக்கறையோடை இருக்கிறவைக்கு தீர்வு வாறது பிடிக்காது தானே. கார், [illegible]குசு பங்களா, சுத்தவர எப்பவும் ஆக்கள் எண்டு ஒரு பந்தா அரசியலை நடத்தக்[illegible]ாண்டு இருக்கிறவைக்குத் தீர்வு பிடிக்குமோ?தமிழ் மக்களைப் பிரிக்கிறதுக்காகவும், தமிழ்த்தேசியத்தை உடைக்கிறதுக்காகவும், தமிழர் வரலாற்றைத் திசை திருப்பிறதுக்காகவும் எய்யப் பட்ட அம்பு அது. அந்தக் கோடாரிக் காம்புக்குத் தீர்வு எண்டதும் தமிழ்த்தேசியமும் பாவைக்காய் மாதிரி, எப்பவும் கைக்கும் எண்டு எங்கடை ஆக்கள் கதைக்கிறது உண்மைதான். ஆனபடியால் பொதுவாக மேலை சொன்னவையளைப்போலை உள்ள தமிழ் அரசியல்வாதியள் உங்களோடை வந்து ஒட்டப்பாப்பினம். தாங்கள் அதைச் செய்வம் இதைச் செய்வம் எண்டு சொல்லுவினம். தங்களோடைதான் தமிழ் மக்கள் ஒட்டிக்கொண்டு இருக்கினம் எண்டும் கூசாமல் பொய் சொல்லுவினம். உங்கடை கட்சியின்ரை வெற்றிக்குப்பிறது தமிழ் அரசியல் பரப்பு மாறிப் போச்சு எண்டதோடை நாறிப்போச்சு எண்டும் சொல்லோலா ஆனபடியாலை நீங்கள் ஒரு உண்மையான அரசியல் கட்சி எண்டால்,மக்களுக்கானவர்கள் எண்டு எண்ணினால் இந்த மாற்றத்தை உங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ளுங்கோ..

எப்பவும் தமிழ் மக்கள் சிங்கள மக்களுக்கு எதிரி இல்லை. ஆனால் சிங்கள ஏகாதிபத்தியத்துக்கும் சிங்கள மேட்டுக்குடி அரசியல்வாதியளுக்கும் தமிழர் எப்பவும் எதிரிதான் எண்டதை மறக்காதையுங்கோ.

நான் இந்தக் கடிதத்திலை முன்னுக்குச் சொன்னதையே தான் திருப்பவும் சொல்லுறன்.போரில் பாதிக்கப்பட்ட எண்பத்தையாயிரம் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் இப்ப வடக்குக் கிழக்கிலை இருக்கினம்.அது மாதிரித்தான் உங்கட பக்கத்திலையும் போராட்டத்தாலை பாதிக்கப்பட்ட, அப்ப அரசாங்கம் பிடிச்சுச் சித்திரவதை செய்துகொண்டு குவிச்ச போராளியளின்ர குடும்பங்களும் இருப்பினம்.அந்தப் பொம்பிளையளும் தங்கடை தங்கடை பிரச்சினையளைச் சொல்ல முன்னுக்கு வந்தாலே கனபேர் அரசியலுக்கை வரலாம். இந்த விசயத்திலை கன அரசுசாரா நிறுவனங்கள் தெண்டிச்சுப் பாத்தவை.கனக்க பயிற்சிப் பட்டறையள் எல்லாம் செய்து பாத்திட்டுக் கையை விட்டிட்டினம். ஆனபடியால் நீங்கள் இதைக் கைவிடேலாது. இந்தப் பிரச்சினைக்கு முன்னுரிமை குடுத்து அதுக்கான ஒரு தீர்வைத் தேடிக் குடுத்தியள் எண்டால் போதும். கன பொம்பிளையள் அரசியலுக்குள்ளை வந்தாலே ஒரு மாற்றம் நடந்த மாதிரித்தான். அந்த நல்ல ஆரோக்கியமான கனவு உங்களுக்குள்ளை இருக்கு தெண்டு நீங்கள் நினைச்சியள் எண்டால் நாட்டிலை ஒரு நிரந்தர அமைதியைக் கொண்டு வரக்கூடிய ஒரு மாற்றத்தை நோக்கி நகருங்கோ. பொதுவாப் பொம்பிளையள் மனசு வைச்சால் பலதைச் சாதிக்கலாம் எண்டது ஒரு பொதுக் கருத்தும் அனுபவமும்.

இந்த மண்ணிலை உள்ள சாதாரண சிங்களக் குடிமகனுக்கு என்ன உரிமை இருக்கிறதோ, அதே உரிமை இந்த மண்ணிலை உள்ள தமிழ்பேசும் குடிமகனுக்கும் இருக்கு எண்டு நினைச்சாலே போதும், பல மாற்றங்களை ஏற்படுத்தலாம்.

இப்படிக்கு,

**அப்பாவி அன்னமுத்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளி

விசும்பின் துளி வீழின் அல்லால்...

## உலக கழிப்பறை தினம்
நவம்பர் 19

### 'கழிப்பறைகள் அமைத்க்கான இடம்'

### கழிப்பறைகள் ஏன் முக்கியம்?

பாதுகாப்பான சுகாதார வசதிகளின்றி வாழ்வோர் — 3.5 பில்லியன்

419 மில்லியன் — இன்னும் திறந்த வெளிகளில் மலங்கழிப்போர்

பாதுகாப்பான முறையில் முகாமைப்படுத்தப்படும் குடிநீர் இன்றி வாழ்வோர் — 2.2 பில்லியன்

### பாதுகாப்பற்ற மலச்சுகாதாரம்

- தொற்று நோய்களின் பரவல்
- மரணங்கள்
- பாடசாலை மாணவர்களின் வரவு குறைதல்
- பாடசாலை இடைவிலகல் அதிகரிப்பு
- சுற்றுச்சூழல் மாசுபாடு

பாதுகாப்பற்ற தண்ணீர், சுகாதாரம் காரணமாக உலகம் முழுவதும் தினமும் சராசரியாக ஐந்து வயதுக்குட்பட்ட 1000 குழந்தைகள் மரணபடைகின்றனர்!

*மூலம்:*
*ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம்,*
*உலக சுகாதார அமைப்பு*

## நீர்த் தட்டுப்பாடு!
### உணவு உற்பத்தி வீழ்ச்சியா?

பூகோள ரீதியில் அதிகரித்து வரும் தண்ணீர்த் தட்டுப்பாடு காரணமாக எதிர்வரும் 25 ஆண்டுகளில் அரைவாசிக்கும் அதிகமான உலக உணவு உற்பத்தி பெருளவு வீழ்ச்சியடையும் என நீர்ப்பொருளாதாரம் தொடர்பான பூகோள ஆணைக்குழுவின் ஆய்வில் தெரிவிக்கப்படுகிறது.
இவ்வாறு ஏற்படும் நீர்த்தட்டுப்பாடு, உலகநாடுகளின் உணவு உற்பத்தியில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்துவதுடன், 2050 ஆம் ஆண்டளவில் அதிக வருமானம் பெறும் நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8 சதவீதம் வரையான வீழ்ச்சியினையும், வருமானம் குறைந்த நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15 சதவீதம் வரையான வீழ்ச்சியினையும் அவதானிக்க வழி வகுக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது. உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள தீவிர காலநிலை மாற்றத்தால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாகவே அவ்வாய்வறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

# புலமையாளர் பதில்

**கேள்வி:** வடமாகாண நிலத்தடிநீர், குறிப்பாக யாழ்குடா நாட்டின் நீர், மலக்கழிவில் காணப்படும் E.coli பக்றீரியா மூலம் பெருமளவில் மாசடைந்துள்ளது எனக் கூறப்படுகிறதே. இதனை எவ்வாறான பரிசோதனைகள் மூலம் கண்டறியலாம்?

***(கஜீபன், தாவடி)***

**பதில்:** நுண்ணுயிர்கள் வெற்றுக்கண்ணுக்குத் தெரியாத மிகச் சிறிய உயிரங்கிகள் என்பதால் நுண்ணுயிர் பரிசோதனை செய்வதன் மூலமாக இவற்றை நீர் மாதிரிகளில் கண்டறியக்கூடியதாக இருக்கும். நுண்ணுயிர் பரிசோதனைகள் ஆவன விஞ்ஞான ஆய்வு, பொதுமக்களின் ஆரோக்கியம், நோய்களை கண்டறிதல் போன்றவற்றிற்கு உறுதுணையாக அமையும்.
Coliform பக்றீரியா (கோலியுரு பக்றீரியா) Gram negative, வித்திகளை உருவாக்காத Oxidation negative, Rod வடிவான பக்றீரியா ஆகும். இதில் E.coli பக்றீரியா Coliform பக்றீரியா குடும்பத்தைச் சேர்ந்த ஒருவகை மலத்தொற்று பக்றீரியா ஆகும்.
E.coli ஆனது நோய் தரக்கூடிய வேறு பல உயிரங்கிகள் நீரில் காணப்படுவதனை அடையாளப்படுத்தும் காட்டி உயிரங்கி ஆகும். இது இளஞ்சூட்டு குருதி வகை கொண்ட பிராணிகளின் பெருங்குடலின் ஊடாக வரும் மலத்தில் உள்ள கிருமி ஆதலால் இது நீரில் காணப்படும் பட்சத்தில் ஏனைய நோய்க்காவி நுண்ணுயிர்களால் அந்நீர் தொற்றுக்கு உள்ளாகி உள்ளது என்பதற்குரிய அறிகுறியாகும். இத்தகைய தொற்றுள்ள நீரை பருகுவதன் மூலமாக அதிகபட்சம் மரணம் கூட நிகழக்கூடிய அபாய நிலை காணப்படுகிறது.
தற்காலத்தில் சுமார் 90% நிலத்தடி நீர் நிலைகள் E.cColi பக்றீரியா மூலம் மாசடைந்துள்ளன. நிலத்தடி நீரில் இருந்து நீர் வடிகட்டி இயந்திரங்கள் மூலம் உருவாக்கப்படும் சுத்திகரிக்கப்பட்ட நீர் கூட ஒழுங்கற்ற பராமரிப்பில் உள்ள நீர்த்தாங்கிகளில் தேக்கி வைக்கப்படும் போது கிருமித்தொற்றுக்கு உள்ளாகக்கூடிய சந்தர்ப்பம் காணப்படுகின்றது.
குடிநீருக்கான SLS 1461 Part I: 2015 முறைமையின் படி நீர்த் தரப் பரிசோதனைகள் செய்யப்படுகின்றன.
பரிசோதனைக்காக கிருமித் தொற்று நீக்கம் செய்த கண்ணாடிப் போத்தல்களில் நீர் மாதிரிகள் பெறப்பட்டு 100ml நீர் மாதிரி 0.45 µm துளைகொண்ட வடிகட்டும் தாள்களினூடாக வடிக்கப்பட்டு அந்த தாள் CCA (Chromogenic Coliforms Agar) ஊடகத்தில் 36° C ±2 வெப்பநிலையில் 21 ±3 மணித்தியாலங்கள் வளர்க்கப்படும்.
ஊடகத்தில் உள்ள Peptone Sorbitol and pyruvate ஆகியவை உயிரங்கிகளுக்கான போசணையை வழங்குவதோடு ஊடகத்தில் உள்ள Tergital -7 இரசாயன பொருளானது Gram positive மற்றும் Coliform அல்லாத Gram negative பக்றீரியாவின் வளர்ச்சியைத் தடுப்பதற்கென ஊடகத்தின் pH 6.8 ±0.2 அளவில் பேணப்படவேண்டும். ஆகவே CCA ஊடகமானது Coliform மற்றும் E.coli பக்றீரியாவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஊடகமாக தொழிற்படுகின்றது.
பரிசோதனையின் போது ஊடகத்தின் கட்டுப்பாட்டு பரிசோதனைக்காக கிருமி நீக்கம் செய்த காய்ச்சி வடித்த நீரும் ஊடகத்தின் வளர்ச்சித் தன்மையை ஆய்வு செய்ய Positive Culture ஆக Enterbacteraerogenes மற்றும் Negative Culture ஆக Coliform அல்லாத Enterococcus faecalis என்பன பயன்படுத்தப்படும்.
Coliform பக்றீரியாவில் உள்ள β-D galactosidase மூலம் இளஞ்சிவப்பு நிற colonies ம் E.coli இல் உள்ள β-D galactosidase & β-D glucuronidase மூலம் இவ்வூடகத்தில் நீல நிற colonise ஆக வளர்ச்சியடைகின்றன. மொத்த coliform ஆக இளஞ்சிவப்பு மற்றும் நீல நிற colonies கணக்கிடப்படும். பரிசோதனை முடிவுகள் 100 மில்லி லீட்டர் நீர் மாதிரியில் எத்தனை colonies (சமுதாயங்கள்) உள்ளன என்றவாறு வழங்கப்படும். பொதுவாக (SLS 614:2013 தரத்திற்கமைவாக குடிநீரில் T-coli (மொத்த கோலியுரு பக்றீரியாக்கள்) எண்ணிக்கையானது 10 colonies வரை அனுமதிக்கப்பட்டாலும் E.coli colonies அறவே இல்லாதிருத்தல் வேண்டும் என்பதே நியதி.

**திருமதி. அனோஜா நிறோசன்**
*பிராந்திய இரசாயனவியலாளர்,*
*தேசிய நீர் வழங்கல்*
*வடிகாலமைப்புச்சபை.*
*யாழ்ப்பாணம்.*



## கடந்த மாத அமர்வு:
# வட மாகாணத்தின் குடிநீர்ப் பாதுகாப்பு

வடக்கின் இளம் நீர்வாண்மையாளர்கள் வட்டத்தின் கடந்தமாத அமர்விலே "குடிநீர் வழங்கல் என்ற பார்வையில் வடமாகாணத்தின் நீர்ப்பாதுகாப்பு" எனும் தலைப்பில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபையின் பிரதம பொறியியலாளரும், யாழ் பல்கலைக்கழகத்தின் வருகை தரு விரிவுரையாளருமான எந்திரி ம.எ.சுதர்சன் பங்குபற்றியிருந்தார். வடமாகாணத்தின் குடிநீர் விநியோகத்தின் தற்போதைய நிலை, அதன் தரம், அளவு, குடிநீரின் தேவைப்பாடு தொடர்பான பகுப்பாய்வு, குடிநீர் விநியோகத்தின் போதான சவால்கள், எதிர்கால நடவடிக்கைகள் போன்ற இன்னோரன்ன விடயங்களை உள்ளடக்கித் தன் முன்னளிப்பை பேற்கொண்டிருந்தார். .
பாதுகாப்பான குடிநீரின் முக்கியத்துவம் தொடர்பாக வலியுறுத்தியிருந்ததுடன், போதுமான குடிநீர் மற்றும் சுகாதார வசதியினைப் பெற்றுக்கொள்ளாதவிடத்து உடல் உபாதைகள், நோய்களுடன் மரணங்களையும் இடப்பெயர்வுகளையும் கூட மக்கள் எதிர்கொள்ள நேரிடும் எனக்குறிப்பிட்டிருந்தார்.
வடமாகாணத்தில் அண்ணளவாக 17.69% சனத்தொகைக்கான பாதுகாப்பான குடிநீர் விநியோகம் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் மேற்கொள்ளப்படுகிறது. இவ் விநியோகத்துக்கான நீராதாரங்களாக மேற்பரப்பு நீரும், நிலத்தடி நீரும் கடல் நீருமே காணப்படுகின்றன. இவ் விநியோகம் மன்னார் மாவட்டத்தில் அதிகமாகவும் யாழ்ப்பாண மாவட்டத்தில் குறைவாகவும் நடை பெறுகீறது. தற்போது வடமாகாணத்தில் ஆண்டொன்றுக்கு 75MCM (மில்லியன் கன மீற்றர்) குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படுவதுடன் அது 2050 ம் ஆண்டளவில் 112MCM ஆக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.
மேலும் வடமாகாணம் உலர்வலயமாகக் காணப்படுவதுடன் அங்கு ஜீவ நதிகள் எவையுமில்லாமையால், மக்கள் நிலத்தடிநீரையே குடிநீர்த் தேவைக்காக நம்பியுள்ளனர், எனினும் குறிப்பாக கோடை காலத்தின் போது போதுமான குடிநீரின் அளவு காணப்படாமையாலும், குடிநீரின் தரம், அளவு போன்றவற்றில் ஏற்படும் மாறுபாடு பாதுகாப்பான குடிநீருக்கான தேவையை ஏற்படுத்தியிருக்கிறது. இத்தகைய தட்டுப்பாடு உருவாவதற்கு காலநிலை மாற்றம் மட்டுமன்றி சனத்தொகை அதிகரிப்பும், அதனால் இயற்கை வளங்கள் மீது ஏற்படுத்தப்படும் நெருக்கடியும், நகரமயமாதலும், இயற்கையாகவே காணப்படுகின்ற நன்னீர் வளத்தில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன.
இத்தகையதோர் நிலையில் 2025 ஆம் ஆண்டு இலங்கைவாழ் மக்கள் அனைவரும் பாதுகாப்பான குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக ஏற்கெனவே காணப்படுகின்ற குடிநீர் விநியோகத் திட்டங்களினை மேம்படுத்துவதுடன், புதிய குடிநீர் விநியோகத் திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் அடிப்படையிலும் குடிநீர் வழங்கலை முழுமையாக மேற்கொள்ள முடியுமென தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் 2020-2025 ஆண்டுக்கான திட்டத்தில் வகைக்குறிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். மேலும் வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் குடிநீர் வழங்கல் தொடர்பாக ஏற்கனவே இருக்கின்ற மேலும் முன்மொழியப்பட்ட குடி நீர் விநியோகத் திட்டங்கள் பற்றியும் அவர் தெளிவுபடுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.
பாதுகாப்பான குடி நீர் வழங்கலில் சமூகத்தின் வகிபாகம் மிக அவசியம் எனவும் பொருளாதார, சமூக, சூழல், தொழில்நுட்பம் சார்ந்த அம்சங்களில் கவனத்திற்கொண்டு செயலாற்றுவதன் மூலம் மாத்திரமே நிலைபேறான, பாதுகாப்பான குடிநீர் வழங்கல் தன் இலக்குகளை அடைந்து வெற்றியளிக்கும் எனவும் அவர் வலியுறுத்தியிருந்தார்.
பாதுகாப்பான குடி நீருக்கான அணுகலை வீடு தோறும் கிடைக்கச் செய்தல் என்பது அதிக பண முதலீட்டுடன் மேற்கொள்ளப்படும் செயற்பாடாகும். அதுமட்டுமன்றி பாதுகாப்பான நீர் என்பது மிகவும் அருகிவருமொன்றாகும். ஆதலினால் எமக்குக் கிடைக்கும் பாதுகாப்பான குடி நீரை நாம் பொறுப்புணர்வுடன் பயன்படுத்துவதோடு அதன் அநாவசிய பாவனையைத் தவிர்க்கவும் உறுதி பூணுதல் அவசியமாகும்.

## அறைகூவல்!

**தலைப்பு:** சுற்றுச்சூழலுக்கான நீரின் ஒதுக்கீடும் அது விவசாயநிலப் பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் தாக்கமும்!


**வழி நடத்துபவர்:** கலாநிதி மகேந்திரன் ரூபவண்ணன்.

**நேரம் : 7.30 பி.ப.**
**திகதி : 21.11.2024 (வியாழன்)**

Zoom அடையாளம்:
**988 210 5064**
கடவுச்சொல் **:Abc.1234**

*எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி துளியின் 9 ஆவது இதழ் உங்கள் கைகளை நாடி வரும். வடமாகாணத்து நீர் வளம் சார்ந்து உங்கள் கருத்துகளையும் கேள்விகளையும் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:* **Water Security through Participatory Action Research (WASPAR) Project, Centre for Digital Epidemeology, Faculty of Medicine, University of Jaffna;** *மின்னஞ்சல்:* **water@univ.jfn.ac.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யாழ்ப்பாணத்தில் ஏழு நாட்கள்....

பேராசிரியர் க.பஞ்சாங்கம்
புதுச்சேரி

ஐந்தாவது காட்சி, சாதிப் பிரச்சினைகளையும் முற்போக்கு நோக்கம் கொண்டவர்களின் சாதியத்துக்கு எதிரான விடுதலையையும் முன்வைத்து அமைக்கப்பட்டிருந்தது. 'பெருவீதிகளில் தமிழுக்காய், தமிழனுக்காய் ஆகாயம் ஆடி உடைந்திட முரசறைந்தோம்!.. வான்கிழித்தோம்.. நெடு வீதி அதில் நடந்து எதிர்த்தெழுந்தோம்! எல்லாம் அதுவாகி சங்கமித்தோம்! ஆனால், சிறுவீதி உள்வீதி பிணக்குகளை நாம் மறந்தோம்!... உள்வீதி விழித்தெழுந்து உரிமைக்காய் குரலெடுக்க நில் என்றோம்! நிறுத்தென்றோம்! புல்லென்றோம்! சில்லென்று செந்நீர் தெறிக்கவிட்டோம்! நல்லாக ஊர்ந்த தேர் நடுவீதி நின்றதுவே ' என்ற உரை முடிந்தவுடன் இரு மாணவிகள் இரண்டு கவிதைகளை உச்சத் தொனியில் ஒலித்தனர். அந்தக் கவிதைகளில் ஒன்று கருணையோகன் என அறியப்பட்ட பேராசிரியர் யோகராசாவின் கவிதையாகும். அது பின்வருமாறு:

*ஐயா! நாவுக் கரசரே!*
*அடியே னுமக்கு விண்ணப்பம்,*
*மெய்யா கவேகேட் கின்றேன்*
*மீண்டும் மானிட வடிவுகொண்டு*
*ஐய! ஈழம் வந்திங்கே*
*ஆண்டவன் கோயிற் தாழ்திறந்து*
*உய்ய வழிகாட் டிடவேண்டும்*
*உரிமை யோடு கேட்கின்றேன்!*

*பூட்டிய கதவு திறந்தே நீ*
*புதுமை செய்தனை பாட்டாலே*
*ஏட்டினி லேநான் படித்ததுண்டு*
*என்னே யுந்த னற்புதமே!*

*மீட்டு மொருமுறை வந்தாலோ*
*மேன்மே லும்பல கபாடங்கள்*
*பாட்டாற் திறந்து பாரிற்புகழ்*
*நாட்டிடலாமே? வந்திடுக!*

*கோயிற் குருக்கள் உள்ளேநாம்*
*கும்பிடச் செல்ல விடுவாரோ?*
*வாயிற்கதவு பூட்டிநடு*
*வழியில் நிப்பர் கடவுளென, ஓர்*
*தாயின் வயிற்றுப் பிள்ளைகள் நாம்*
*தடுத்தல் வைத்தல் இது முறையோ?*
*நாயினி ழிந்தோ ராகஎமை*
*நடத்தி வைக்க இவர் யாரோ?*

என்று சாதி அடக்குமுறையிலிருந்து தமிழரின் ஒரு பகுதியினர் விடுதலைபெறவேண்டியதன் அவசியம் உணர்த்தப்பட்டிருந்தது. சாதியால் தமிழர் ஒருமை சிதைபடுவதைச் சொல்லிவிட்டு அடுத்த ஆறாவது காட்சியில் 'மலையக மக்களின் பிரச்சினைகளையும் விடுதலையையும்' முன்வைக்கிறது கவிதா நிகழ்வு.. மலையகத்தில் குடியேற்றப்பட்ட மக்களின் அடிமைநிலை, அவர்களின் உழைப்பின் சுரண்டல், அவர்களின் விசுவாசம், அவர்களுக்கான பிரஜாவுரிமைப் பறிப்பு என்பவற்றிலிருந்து விடுதலை பெறுவதன் அவசியம் கவிதைகளின் வழியாகவும் பாடல் வழியிலும் பேசப்பட்டு அரங்கு உறையவைக்கப்படுகிறது.

'ஒன்றரை நூற்றாண்டு உடைமையாகக் கொண்டு தேசத்துக்குத் தேயிலையும் தேயிலைக்கு நாமும் என ஆகிப் போன பந்தத்துக்குக் காகித ஒப்பந்தம் நிர்ப்பந்தம் ஏன்?

இங்கே மண் குவியல்களா மலைகள்
அவை தேச அன்னையின் முலைகள்.
பால் சுரக்கச் செய்தன இந்தக் கரங்கள்.

உன்று பேசும் கவிவரிகள் கண்களில் நீரைக் கோர்த்து விடுகின்றன. பாடிய பிள்ளைகளின் ஆற்றுகைத் திறன் வியக்கவைத்தது.

தொடர்ந்து காட்சி எழில், பெண் விடுதலை முன்வைக்கப் படுகிறது. உரைஞர் திரைக்குப் பின்னால் இருந்து இப்படி சொல்கிறார்:

"மாதர் தம்மை அடிமை செய்யும் மடமை கொளுத்த விளைந்தனர். பண்பாடு, மரபு, மதம் என்பவற்றின் பெயரால் அடிமைகொள்ளப்பட்ட பெண்களின் வாழ்வை மீட்டெடுக்க போராட்டத்துக்கு அழைத்தனர். பெண்ணை ஒரு அழகான பண்டமெனக் கருதிய சிந்தனையை சிதையேற்றி எரித்தனர். கண்ணுக்கு மை பூசி, உதட்டுக்குச் சாயமிட்டு காலம் கழிப்பதில் பயனில்லை என்று வீறுகொண்டு எழுந்தனர்" இதனை சிவரமணியின் கவிதையால் உணர்த்தினர்.

*"காதலும் கானமும்எங்கள் தங்கையர் பெறுவதற்காக*
*எங்கள் கண்மையையும் இதழ் பூச்சையும்*
*சிறிது காலம் தள்ளி வைப்போம்.*
*எங்கள் இளம் தோள்களில்*
*கடமையின் சுமையினை ஏற்றிக் கொள்வோம்.*
*வாருங்கள் தோழிகளே! நாங்களும் வழி செய்வோம் .*
*மண்ணில் கோலமிட்டு அழித்தது போதும்*
*எங்கள் செந்நீரில் கோலமிட்டு*
*வாழ்க்கைக் கோலத்தை மாற்றி வரைவோம் வாருங்கள் தோழிகளே! "*

இந்தக் கவிதையை ஒரு முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த மாணவி உயர்வு வீச்சுடன் சொல்லுவது காட்சிக்கு இன்னொரு பரிமாணத்தைக் கொடுத்துவிடுகின்றது.

அந்தக் காட்சி முடியவும் ஒன்பது மாணவர்கள் மேடையில் ஒன்றாகத் தோன்றி ஆங்காங்கே நின்று கவிதை வாசித்த எட்டாவது காட்சியின் தலைப்பு 'போரும் இராணுவ மயமாக்கலும்' என்று வைத்துக்கொள்ளலாம். இந்தக் காட்சியின் தொடக்கத்தில் அமைந்த உரைஞரின் உரையும் வாசிக்கப்பட்ட கவிதைகளும் பார்வையாளர்களின் கண்களை நனைத்தன. இதோ அந்த உரையும் கவிதைகளும்:

எங்கள் வாழ்வின் வனப்பைத் தின்று ஏப்பமிடும் வல்லமை ஐந்து தசாப்தங்களுக்கு வாய்த்தது. கடந்து சென்ற நூற்றாண்டின் அரைப்பகுதியை போர் தின்றது. நீண்டதொரு நெருப்பாற்றைக் கடந்து செல்லும் 'வாழ்வுக்கு வாழ்க்கைப்பட்டோம். தொண்ணூறாயிரம் புத்தகங்களால் புத்தரின் உடல் எரித்தோம், கோணேஸ்வரிகளின் யோனிகளை குண்டுவைத்துச் சிதைத்தோம், சிலுவையில் அறையப்பட்ட ஜேசுபிரானை அவர் தலத்தில் குண்டு வைத்து பலமுறை கொன்றோம், வசந்த காலத்தை கூறையாடி மகிழ்ந்தோம், சோதரனின் குருதி தொட்டுத் தாய்க்குத் திலகமிட்டோம், வேட்டுக் கோதின் நிறத்தினிலே காதலியை கண்டிருந்தோம். அரை நூற்றாண்டுத் துயரின் முகங்கள் பல காண்போம்' என்று வரும் உரைப் பகுதியைத் தொடர்ந்து விரியும் கவிதைகளும் அவை தரும் போர்க்கால வாழ்வின் துயர்களும் அவற்றிலிருந்து விடுதலை பெறுவதற்கான ஏக்கங்களும் கவிதா நிகழ்வை உச்சத்தில் கொண்டு சென்று நிறுத்திவிடுகின்றது. மாணவர்களின் ஆற்றுகை நாடகப்பாங்குடன் மிகச் சிறப்பாக கவிதைகளை இழைத்துத் தந்திருந்தது. அஸ்வகோசின் கவிதை ஒன்றின் வரிகள் மாணவர்கள் சொல்லும்போது உணர்வைக் கொணர்ந்து சேர்த்திருந்தது.

*"சிதழூறும் காயங்களிடையே*
*நான் இருந்தேன்*
*சிதைந்து போன மைந்தரின்*
*வேதனை ஓலங்கள்*
*என்னை உறுத்தின.*
*நான் வேதனை உற்றேன்*



*சிதழூறும் காயங்கள் பேசும் மொழியினால்*
*என்னைப் பேச விடுங்கள்.*
*இறுதியாக என்னிடம் வந்திருந்தான்.*
*அவனது தேகம் குளிர்ந்திருந்தது*
*இரத்தம் உறிஞ்ச நுளம்புகள் வரவில்லை*
*ஈக்களை அண்ட நான் விடவில்லை!"*

என்று அந்தக் கவிதை முடிகின்றது. என் பின்னால் இருந்த ஒரு தாய் விசும்பும் ஓசை கேட்டது. அந்த அளவிற்கு மாணவிகளின் சோக பாவத்தோடு, தலைவிரி கோலத்தோடுகவடிய கவிதை வார்த்தைகள் வெளியே வந்து பரவின.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி கிருஷ்ணவேணி சிங்கராஜன்

# துணை

காலைப்பொழுதின் ஆரவாரங்களுடன் அன்றைய பொழுது மெல்ல மெல்லப் புலர்ந்தது. கொல்லைப்புறத்து வேப்பமரத்தில் தூங்கிய சேவல் வெள்ளையன் கூவிய சத்தம் கேட்டு திடுக்கிட்டு கண்விழித்த மணியம் பரபரப்பானார்.

"அட அதுக்கிடையிலை விடிஞ்சிட்டுது. நான் நல்லா அயர்ந்து போனன்"…. என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு, அவசரஅவசரமாக கிணற்றடிப்பக்கம் விரைந்தார். மணியம் மனிதநேயம்மிக்க ஒரு மனிதர். சிறுவயதிலிருந்தே கஷ்டப்பட்டு உழைத்து முன்னுக்கு வந்தவர். கடந்துவந்த பாதையை இன்றும் மறக்காதவர்.

ஐம்பத்தைந்து வயதிலும் தளராத உறுதியுடன் தொழில் செய்பவர். மணியம் என்றால் ஊரில் தெரியாதவர்கள் இல்லை என்று கூறுமளவுக்கு பிரசித்தமான மனிதர். மணியம் என்று நினைத்தவுடன் அனைவருக்கும் நினைவுக்கு வருவது அவரது சைக்கிள்தான். தனது தோட்டத்திலே விளையும் மரக்கறி வகைகள்,கிழங்கு வகைகள், வாழைக்குலை போன்ற இன்னோரன்ன பொருட்களை பெரிய கரியர் பூட்டப்பட்ட சைக்கிளிலே வைத்துக்கட்டி, பக்குவமாகச் சந்தைக்குக் கொண்டுபோகும் அழகே அழகுதான். இன்று சுன்னாகம் சந்தைக்குச் செல்வதற்காக மரவள்ளிக்கிழங்கு பிடுங்கி வைத்திருந்தார். காலையில் கண்விழிக்கப் பிந்தியதால் பரபரப்பானார்.

மரவள்ளிக் கிழங்கு மூடையை இரு கைகளாலும் பலமாகத் தூக்கி சைக்கிள் கரியரில் வைத்துவிட்டு வெளிவாசல்வரை உருட்டியபடியே வந்தார்.

அப்பொழுதுதான் எழுந்து கண்களைக் கசக்கியபடி வெளியே வந்த மணியத்தின் மகன் வசந்தன் "அப்பா… முன் சில்லுக்கு காத்து காணாதுபோல கிடக்கு…" என்றபொழுது திடுக்கிட்டு முன்பக்கம் குனிந்தார். வசந்தன் கூறியது சரிதான்,

"ஓம் தம்பி… அந்த 'பம்மை' ஒருக்கா கொண்டு வா. காத்தடிப்பம்…" என்றார் மணியம்.

"என்ன இது… எல்லாம் தடங்கலாக இருக்குது. காலமை எழும்பவும் பிந்திப் போச்சுது. இப்ப காத்தும் போச்சுது…"

"அப்பா… நான் காத்தடிக்கிறன். நீங்கள் சைக்கிளைப் பிடிச்சுக் கொண்டு நில்லுங்கோ" என்ற வசந்தனிடம் "ஓம் ராசா… நீ காத்தை அடி…" என்றவாறு சிந்தனையில் ஆழ்ந்தார்.

"என்ரை ராசாத்தி… எத்தினை வருசமா என்னோட பாடுபடுகிறாள். இவ்வளவு காலமும் எங்களுக்குச் சோறு போட்டவள் அந்த நன்றியைக் கடைசி வரையும் மறக்கக் கூடாது."

"அப்பா என்ன யோசிக்கிறியள்? காத்து அடிச்சிட்டன். காணுமோ எண்டு பாருங்கோ…"

என்ற குரல் கேட்டு சிந்தனையிலிருந்து விடுபட்டார்.

மெதுவாக முன்சில்லை அமர்த்திப் பார்த்த பின் "ஓம் ராசா… காணும். நீ உள்ளுக்குப் போ நான் போட்டு வாறன்" என்றபடி சைக்கிளில் ஏறினார். சைக்கிள் விமானமாய் ஆகிவிட்டது மணியத்திற்கு.

இந்த சைக்கிள் மணியத்தின் வாழ்வில் முப்பது வருடங்களாக அவருள் கலந்தது. அவர்அதுவாகி, அது அவராகி உயிரோட்டமான ஓர் உறவுப்பிணைப்பைக் கொண்டிருந்தது.

மணியம் இருபத்தைந்து வயது இளைஞனாக இருந்த வேளையிலே அவருடைய தந்தை வாங்கிக் கொடுத்தார். பல இடப்பெயர்வுகளைச் சந்திக்க நேர்ந்த பொழுதும் சைக்கிளை கைவிடாது சென்றவிடமெல்லாம் கொண்டு சென்றார்.



"இடம்பெயர்ந்த வேளையொன்றிலே எறிகணை வீச்சிலே தந்தையைப் பறிகொடுத்த பின் தந்தை வாங்கிக் கொடுத்த சைக்கிள் மீது அதிக பாசமும் நேசமும் ஏற்பட்டது.

"இந்தச் சைக்கிளிலே நான் எத்தினை வியாபாரங்களைச் செய்திருக்கிறன். விறகு வியாபாரம், மரக்கறி வியாபாரம், தேங்காய் வியாபாரம், ஐஸ்கிறீம் வியாபாரம், கடைசியாக மீன் வியாபாரம் எண்டு எல்லாம் செய்தன். இந்தச் சைக்கிள் எனக்குக் கைகுடுத்த மாதிரி ஆரும் கை குடுக்கேல்ல."

இடம்பெயர்ந்த வேளையொன்றிலே எறிகணை வீச்சிலே தந்தையைப் பறிகொடுத்த பின் தந்தை வாங்கிக் கொடுத்த சைக்கிள் மீது அதிக பாசமும் நேசமும் ஏற்பட்டது.

"இந்தச் சைக்கிளிலே நான் எத்தினை வியாபாரங்களைச் செய்திருக்கிறன். விறகு வியாபாரம், மரக்கறி வியாபாரம், தேங்காய் வியாபாரம், ஐஸ்கிறீம் வியாபாரம், கடைசியாக மீன் வியாபாரம் எண்டு எல்லாம் செய்தன். இந்தச் சைக்கிள் எனக்குக் கைகுடுத்த மாதிரி ஆரும் கை குடுக்கேல்ல."

'கட்டினவள் கைவிட்டுப் போக, கடைசிவரைக்கும் என்னோட துணையா இந்தச் சைக்கிள் நிக்குது. இந்தச் சைக்கிளில ஏதாவது பிழை வந்தால் என்னால தாங்க முடியாமல் கிடக்குது… 'யோசனையுடன் சைக்கிளைச் செலுத்திக் கொண்டிருந்த மணியம் பாம்பாய் வளைந்த வீதியைக் கடந்து சந்தியில் தடுமாறிவிட்டார். நாலாபுறத்திலுமிருந்து வாகனங்கள் வந்து கொண்டிருந்தன.

"என்னண்ணை… வீட்டிலை சொல்லிப் போட்டு வந்தனீங்களே?" என்றபடி ஆட்டோ சாரதியான இளவட்டம் ஒன்று முந்திச் சென்றது.

ஒரு வழியாக சந்தை வந்துவிட்டது. மணியத்தைக் கண்டவுடன் ஓடி வந்து மரவள்ளிக் கிழங்கு மூடையை இறக்கினார் நடராசா. அவர் மணியத்தின் உறவினர். வியாபாரிகள் ஓடி வந்து மூடையைப் பற்றிக் கொண்டனர்.'என்ன மணியம் நீ இன்னும் உந்தச் சைக்கிளை விடேல்லையே?' என்றார் நடராசா.

"என்ன நடராசண்ணை இது என்ரை குடும்பத்துக்கும் கடவுள் போல, எங்களுக்குச் சோறு போட்ட இந்தச் சைக்கிளை மறக்கலாமோ அண்ணை?"

"ஓமோம், அது சரிதான் உனக்குப் பிறகு, நான் நாலு சைக்கிள்கள் மாத்திப்போட்டன் நீ என்னெண்டால் அண்டு தொடக்கம் இண்டைவரைக்கும் ஒரு சைக்கிளையே வைச்சிருக்கிறாய், பிழைக்கத்தெரிஞ்சவன் தான்" நடராசர் தனது உள்ளக்கிடக்கையை வெளியிட்டார்.


"அண்ணை இந்தச் சைக்கிள் நகமும் சதையுமா என்ரை வாழ்க்கையிலே ஒன்றிப் போச்சுது. என்ரை வாழ்க்கை முடியும் வரைக்கும் நான் இந்தச் சைக்கிளை வைச்சிருக்க வேணுமண்ணை. இந்தச்" கூறியபடி புறப்பட்டார்.

"அண்ணை இந்தாங்கோ கழிவு போக தொண்ணூறு கிலோ கிழங்கு, நூறு ரூபாப்படி ஒன்பதினாயிரம் ரூபா… காசைப் பிடியுங்கோ" என்ற வியாபாரியிடமிருந்து பணத்தை வாங்கி கண்களில் ஒற்றிக்கொண்ட மணியம் உற்சாகமிகுதியுடன் இளைஞனாக மாறிவிட்ட உணர்வுடன் வீடுதிரும்ப ஆயத்தமானார். நாளை காலை சந்தைக்குச் செல்ல வேண்டும் என்ற உந்துதலுடன்..

சைக்கிள் சவாரி அவருக்கு இதமாய் இருந்தது. கையிலே பணம், நிறைவான குணம், ஏகாந்தப் பெருவெளியின் நாயகனாக காற்று அவரைத் தழுவிச் சென்றது.

(முற்றும்)

சஞ்சீவி சிறுகதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ பா.துவாரகன்

# நினைவுகளில் தமிழறிஞர்:

## க. உமாமகேசுவரம்பிள்ளை
## (05.05.1934 - 20.04.2024)

15

# யாழ்ப்பாணப் பண்பாட்டின் அடையாளம்

கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி மீது பேரபிமானம் மிக்கவராக விளங்கிய தமிழக அறிஞர் கி.அ.சச்சிதானந்தம் பற்றி, கடந்த வாரம் சில விடயங்களை எழுதினேன்.

யார் இந்த ஆனந்தகுமாரசுவாமி? இதற்கான விடையைப் பார்க்க முன்னர் ஓர் அறிமுகம் எழுத விழைகின்றேன்.

யாழ்ப்பாணத்தில் ஒருகாலத்தில் பெயர் சொல்லக்கூடிய ஆங்கில ஆசிரியர்கள் இருவர் இருந்தனர். இருவரும் ஆங்கில இலக்கிய அறிவிலும் வாசிப்பிலும் பண்பிலும் உயர்ந்து விளங்கினர். ஒருவர் உருத்திராவத்தை புலோலியைச் சேர்ந்தவர். அவர் அமரர் ஆ. கந்தையா. மற்றவர் நீர்வேலியைச் சேர்ந்த ரி. என். பஞ்சாச்ஷரம் (T. N. Punjaksharam). நீர்வேலியில் வாழ்கின்றார்.

ஏறத்தாழ 20 வருடங்களுக்கு முன்னர் நடந்த ஒரு நிகழ்வு. யாழ். பல்கலைக்கழகத்தில் ஆங்கிலமொழி விரிவுரையாளராகக் கடமையாற்றும் அருணகிரிநாதன் அவர்களைச் சந்தித்தபோது, அருணகிரிநாதன் யாழ்ப்பாணத்தில் ஆங்கிலம் தெரிந்த இருவர் என்று பஞ்சாச்ஷரம், கந்தையா என்ற இரு புலமையாளர்களையும் குறிப்பிட்டார். (இவ்வாறு குறிப்பிடுவதால் இத்தகைய தகைமையுடைய வேறு எவரும் இல்லை என்றும் கருதலாகாது).

நம் காலத்தில் வாழ்ந்த நாயகர்களில் யாழ்ப்பாணத்தின், தமிழ்ப் பண்பாட்டின் குறியீடுகளாக விளங்கிய இத்தகைய நுண்மாண் நுழைபுலம் மிக்க பேரறிஞர்கள் வரிசையில் பண்டிதர் உமாமகேசுவரன் அவர்களும் ஒருவர்.

### கீழைத்தேய கலாசாரத்தின் இந்தியப் பண்பாட்டின் அடையாளம்

### ஆனந்த குமாரசுவாமி மாவத்தை:

கொழும்பில் கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி பிறந்த இடத்திலுள்ள வீதிக்கு இந்தப் பெயர் நீண்டகாலதுக்கு முன்னர் வழங்கப்பட்டது. இன்றும் அவ்வீதி அப்பெயராலே அழைக்கப்படுகிறது.

பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னர்(2012 இல்) கொழும்பிலுள்ள ஆனந்தகுமாரசுவாமி மாவத்தையின் பெயரை மாற்றுவதற்கு இலங்கையின் அன்றைய ஆட்சியாளர்கள் முயன்றார்கள். இந்த விடயம் ஊடகங்களில் வெளிவந்துபோது இலங்கையர்கள் சிலர் கண்டனம் தெரிவித்தனர். அன்று ஆசிரியர் பஞ்சாச்ஷரம் அவர்கள் ஆனந்த குமாரசுவாமி மாவத்தையின் பெயரை மாற்றுவதற்கு அரசு எடுக்கும் முயற்சியைக் கேள்விப்பட்டு மனம் வெதும்பினார். கொழும்பிலிருந்து வெளிவரும் தி ஐலண்ட் நாளிதழின் ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுதினார் (Letter to editor). அவரது கடிதம் 2012, பெப்ரவரி 23 அன்று தி ஐலண்ட் நாளிதழில் பிரசுரமானது. அதன் தலைப்பு: Honour to those to whom honour is due (கௌரவத்துக் குரியவர்களுக்கே கௌரவம்)

ஆசிரியர் பஞ்சாச்ஷரம் அவர்கள் எழுதிய கடிதத்தில் சிந்தனைக்குரிய பல விடயங்கள் இருந்தன. அவற்றுட் சில:


> "ஆனந்தகுமாரசுவாமி கீழைத்தேச கலாசாரத்தின் மிகச்சிறந்த ஆளுமை. கொழும்பிலுள்ள ஒரு தெருவுக்கு ஆனந்தகுமாரசுவாமி மாவத்தை என்ற பெயரை வழங்கியமையானது பெருமைக் குரியது அல்ல. அது பிரிட்டானிக்கா கலைக்களஞ்சியம் ஆனந்த குமாரசுவாமியின் அறிவுத்திறனுக்கும் சிவானந்த நடனம் என்ற ஆனந்தவின் ஆராய்ச்சிக் கட்டுரைக்கும் வழங்கிய உயர்வுக்கும் ஒருபோதும் ஈடாகாது.
>
> அமெரிக்காவிலுள்ள போஸ்டன் பல்கலைக்கழகம் ஆனந்தகுமாரசுவாமியின் அறிவின் மேன்மையை என்றும் பறைசாற்றவல்ல சுவடிகளைப் பாதுகாத்து வருகிறது. ஆனந்தகுமாரசுவாமி மாவத்தையின் பெயரை மாற்றவேண்டும் என்ற எண்ணமானது தவறுகளின் நகைச்சுவை என்பதிலும் வெறுப்புகளின் மர்மம் நிறைந்தது என்றே கூறத் தகும் (This is indeed a tragedy of horrors than a comedy of errors)"


### யார் இந்த ஆனந்த குமாரசுவாமி?

**கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி இந்தியக் கலையின் உன்னதத்தை மேற்குலகுக்கு அறிமுகப்படுத்தி, இந்து, பௌத்தக் கலை வடிவங்களின் உள்ளார்ந்த தன்மையை** உலகறியச் செய்தவர். ஆனந்தகுமாரசுவாமி இலங்கையின் புகழ்பூத்த குடும்பத்தில் உதித்த வைரம். சேர் முத்துகுமாரசுவாமியின் மகன். யார் இந்த முத்துகுமாரசுவாமி? விரோரியா மகாராணியால் மிகக் குறைந்த வயதில் சேர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட முதலாவது இலங்கையர் என்ற பெருமைக்குரியவர். முத்துகுமாரசுவாமி பிரித்தானிய சட்ட சபையில் உறுப்பினரான முதலாவது இந்துவும் ஆசிய நாட்டவருமாவார். 1863 இல் இலண்டனில் உள்ள "லிங்கனின் இன்" (Lincoln's Inn: is a thriving society of barristers, situated on a large estate of historic buildings, contemporary facilities, and tranquil grounds in central London) என்ற வழக்கறிஞர்களின் அவையில் சேர்க்கப்பட்ட முதலாவது இந்து. இதற்கு முன்னர் கிறித்துவர் அல்லது யூதர் ஆகியோர் மாத்திரமே இவ் உயரிய சபையிலே அங்கம் வகித்தனர்


முத்துகுமாரசுவாமி பருத்தித்துறையைச் சேர்ந்த கேட் முதலியார் ஆறுமுகம்பிள்ளை குமாரசுவாமியின் மகனாவார்.

நல்லை ஆதீனம் வெளியிட்ட முதலாந்திருமுறை





உமாமகேசுவரன் பன்னிரு திருமுறை பதிப்புப் பணியின்போது மயிலாடுதுறை தருமபுர ஆதீனக் கலைக் கல்லூரியில், அறை எண் 7 இல் வசித்த காலத்தில் எழுதிய நாட்குறிப்பிலிருந்து ( 1997.02.07 -)


திருச்சிற்றம்பலம்
திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய
தேவாரம்
முதலாந்திருமுறை
யாழ்ப்பாணம்
நல்லை, திருஞானசம்பந்தர் ஆதீனம்
திருநெறிய தெய்வீக மகாநாட்டு மலர்
87-05-13
பதிப்பாசிரியர்:
க. உமாமகேஸ்வரன்

### இலக்கணக் குறிப்பு

### அளபெடை

தமிழ் எழுத்துகள் ஒவ்வொன்றுக்கும் உச்சரிப்பதற்குரிய காலஅளவு உண்டு. அதனை மாத்திரை என்று குறிப்பிடுவர். அத்தகு மாத்திரை தன் அளவுடன் அதிகமாகி ஒலிப்பதை அளபெடை எனபர்.

உயிர், மெய் என்னும் இருவகை எழுத்துகளும் அவ்வாறு இயல்பான அளவில் இருந்து அதிகரித்து ஒலிக்கும். அதுவே அளபெடை எனப்பெறும். எனவே, அளபெடை இரண்டாகிறது. அவையாவன உயிரளபெடை, ஒற்றளபெடை.

### உயிரளபெடை

உயிரெழுத்துகளில் குறில், நெடில் என்னும் இரு வகைகள் உண்டு. குறில் எழுத்துக்குரிய அளவு ஒரு மாத்திரையாகும். அவ்வாறே நெடில் எழுத்துக்குரிய அளவு இரண்டு மாத்திரையாகும். சில நேரங்களில் ஓர் உயிர் எழுத்தை இரண்டு மாத்திரை அளவிற்கு, அதிகமாக ஒலிக்கவேண்டிய தேவை ஏற்படும். அப்போது நெடில் உயிர்எழுத்துகளை மேலும் நீட்டி ஒலிப்பர். அதுவே உயிர் அளபெடை எனப்பெறும். அளபெடை அமைந்ததற்கு அடையாளமாக உயிர்நெடில் எழுத்துக்கு அருகில் உயிர்க்குறில் எழுத்து கூடுதலாக இடம்பெறும்.

### ஒற்றளபெடை

செய்யுளின் ஓசைக்காக மெய்யெழுத்துகளும் தமக்குரிய அரைமாத்திரை அளவினைவிட அதிகமாக ஒலிப்பதை ஒற்றளபெடை என்பர்.

### பிழை திருத்தம்

கடந்த வாரம் (2024.11.03 அன்று) பிரசுரமான பகுதியில்(14) சிவபுராணத்தில் உள்ள அளபெடைகள் பற்றிக் குறிப்பிடும்போது 'அவனரு ளாலே அவன்தாள் வண அங்கி' என்ற அடியில் வரும் வணஅங்கி என்ற சொல் வணாங்கி என்று இடம்பெற்றிருக்க வேண்டும். இங்கு உயிரளபெடை அல்ல ஒற்றளபெடையே ஓசைக்காக வந்திருக்கவேண்டும். தவறு எனது. பொறுத்தருள்க.

இன்று பெரும்பாலான சிவபுராணப் பதிப்புக்களில் அளபெடையைக் கவனிப்பதில்லை என்பது ஆசிரியர் உமாமகேசுவரனது ஆதங்கம்

### பன்னிரு திருமுறை பதிப்புப் பணியில் உமாமகேசுவரன்

பண்டிதர் உமாமகேசுவரன் அவர்கள் தருமபுர ஆதீன பன்னிரு திருமுறைப் பதிப்புப்பணியில் 1997-1998 காலப் பகுதில் பதிப்பாசிரியராகக் கடமையாற்றியபோது, அளபெடைகளைக் கவனித்தும் பாடபேதங்களை உற்றுநோக்கியும் செவ்வை பார்த்தும் பன்னிரு திருமுறைகளும் பிழை இன்றி செம்பதிப்பாக வெளிவரக் காரணமாக இருந்தார். சிவபுராணத்தில் உயிரளபெடை வருமிடங்களை தேவாரம் என்ற தருமபுர ஆதீன இணையத்தளத்தில் காணலாம்.

https://thevaaram.org/thirumurai_1/songview.php?thiru=8&Song_idField=8101&padhi=001

(07 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றத்தேர்தல் 2024:

*(முதலாம் பக்கத் தொடர்ச்சி)*

யத்தைக் கொண்டிராத தேசிய கூட்டுணர்வைக் கொண்டிராத, பிரதான தமிழ்த்தேசியக் கட்சிகளின் தோல்வியின் விளைவே, அதிகரித்த சுயேச்சைகளும் கட்சிகளும். இதனால் ஏற்பட்ட சலிப்பினாலும் விரக்தியினாலும் வெறுப்பினாலும் ஒரு பகுதி தமிழ் வாக்காளர்கள் என்.பி.பி.யை நோக்கிப் போனார்கள்.

நாடாளுமன்றத்தில் என்.பி.பி. பெற்றிருக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்பது திருப்திகரமான மாற்றங்களைச் செய்யப் போதுமான ஒரு பெரும்பான்மை. அப்படிப் பார்த்தால் என்.பி.பி. இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் புரட்சிகரமான முடிவை எடுக்குமா? அல்லது மகாவம்ச மனோநிலையின் கைதியாக மாறி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைத் தானே தோற்கடிக்குமா? இலங்கைத் தீவியின் எந்த ஒரு தேர்தல் வெற்றியும் எப்பொழுது முழு வெற்றியாக மாறுகிறது என்றால், இனப்பிரச்சினையைத் தீர்க்கும் போதுதான். என்.பி.பி. கருதுவதுபோல இனப்பிரச்சினை,ஒரு மனிதாபிமானப் பிரச்சினையல்ல.அது இலங்கைத் தீவின் பல்லினத் தன்மையை ஏற்றுக்கொள்ளாமையின் விளைவுதான். இந்தச்சிறிய தீவில் ஒன்றுக்கு மேற்பட்ட தேசங்கள்,தேசிய இனங்கள் உண்டு என்பதனை ஏற்றுக்கொள்ளவேண்டும். தமிழ் மக்களை இறைமையும் சுயநிர்ணய உரிமையும் கொண்ட ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொண்டு, இலங்கைத் தீவின் அரசுக் கட்டமைப்பை பல்லினத் தன்மை கொண்ட ஒன்றாகக் கட்டமைக்கவேண்டும். அவ்வாறான அடிப்படை மாற்றம் ஒன்றைச் செய்வதற்கு என்.பி.பி. தயாரா? இப்போதிருக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதைச் செய்யப் போதுமானது.

அதே சமயம் இம்முறை தேர்தல் முடிவுகளில் தமிழ்த்தேசிய நோக்கு நிலையில் நம்பிக்கையூட்டும் விடயங்கள் எவை என்று பார்த்தால்,கிழக்கில் பிரதேச வாதத்தை முன்வைக்கும் பிள்ளையான் தோற்று விட்டார்.அது பெரிய வாக்கு வித்தியாசத்தில் கிடைத்த தோல்வியல்ல. சில நூறு வாக்குகள் வித்தியாசத்தில் கிடைத்த தோல்விதான். சங்குக்கு யாழ்ப்பாணத்தில் கிடைத்த தோல்விபோல. எனினும் தேர்தல் கணக்கில் அது தோல்வி. கிழக்கில் தமிழரசுக் கட்சிக்கு ஐந்து ஆசனங்கள் கிடைத்திருக்கின்றன. இது கிட்டத்தட்ட ஒன்றரை மாதத்துக்கு முன் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் தாயக ஒருமைப்பாட்டிற்குக் கிடைத்த வெற்றியின் அடுத்த கட்ட வளர்ச்சி.ஜனாதிபதித் தேர்தலில் கிழக்கிலிருந்து கொண்டுவரப்பட்ட ஒரு வேட்பாளருக்கு வடக்கில் மட்டும் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரத்துக்கும் அதிகமான வாக்குகள் கிடைத்தன.நாடாளுமன்றத் தேர்தலில் கிழக்கு மைய பிரதேசவாதத்துக்கு தலைமை தாங்கும் அரசியல்வாதி தோல்வியுற்றிருக்கிறார்.ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு, தாயக ஒருமைப்பாட்டை நிரூபித்தது. நாடாளுமன்றத் தேர்தலில் கிழக்கு தாயக ஒருமைப்பாட்டை நிரூபித்திருக்கிறது. வடக்கையும் கிழக்கையும் பிரித்த ஜே.வி.பி.க்கு வடக்கு, கிழக்கில் 7 ஆசனங்கள் கிடைத்திருக்கும் ஒரு பின்னணியில் கிழக்கில் தாயக ஒருமைப்பாட்டுக்கான பலமான மக்கள் ஆணை கிடைத்திருக்கிறது.

மேலும் தமிழரசுக்கட்சி அதிக ஆசனங்களைப் பெற்ற ஒரு தனிக் கட்சியாக மேலெழுந்திருக்கிறது. கடந்த முறையைவிட இந்த முறை இரண்டு ஆசனங்கள் அதிகம். ஒரு கட்சியாக அந்த வெற்றியைக் கொண்டாடலாம். ஆனால் தேசத்தைத் திரட்டுவது என்பது கட்சியைப் பலப்படுத்துவது மட்டும் அல்ல. கடந்த நாடாளுமன்றத்தோடு ஒப்பிடுகையில் மொத்த தமிழ்த் தேசியப் பிரதிநிதித்துவத்தில் மூன்று ஆசனங்கள் இழக்கப்பட்டமை வீழ்ச்சி. என்.பி.பி. யாழ்ப்பாணத்தில் அதிக ஆசனங்களை வென்றிருக்கிறது. கிழக்கிலும் அதற்கு ஆசனங்கள் கிடைத்துள்ளன. அவை தமிழ்த்தேசிய அரசியலின் தோல்விகள்.

இந்தத் தோல்விகளுக்கு ஊடாகப் பார்த்தால் தமிழரசுக் கட்சி பெற்ற வெற்றியைக் கொண்டாட முடியாது. ஆனால் சுமந்திரன் கட்சியின் வெற்றியைக் கொண்டாடுகிறார். கடந்த ஒரு தசாப்தத்துக்கும் மேலாகத் தமிழரசியலைத் தீர்மானிக்கும் சக்திபோல செயற்பட்ட சுமந்திரனும் இந்தத் தோல்விக்குப் பொறுப்பு. அதற்குரிய தண்டனையை வாக்காளர்கள் அவருக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஒட்டுமொத்தத் தமிழ்த்தேசிய அரசியலில் பின்னடைவை ஏற்படுத்திவிட்டு கட்சி பெற்ற சிறு வெற்றியை எப்படிக் கொண்டாட முடியும்? ஏனைய கட்சிகள் இல்லாமல் தனிக் கட்சியாக வெல்லமுடியும் என்று மார்தட்டுவதே தேசியவாத அரசியலுக்கு,தேசத் திரட்சிக்கு எதிரானது.

முன்னணி ஏற்கனவே இருந்த ஓர் ஆசனத்தை இழந்திருக்கிறது. சங்குக்கும் வடக்கில் ஒரேயொரு ஆசனந்தான்.சங்குச் சின்னத்தைப் பயன்படுத்துவதன்மூலம் பொதுவேட்பாளருக்குக் கிடைத்த வாக்குகளை நாடாளுமன்றத் தேர்தலுக்கும் மடை மாற்றலாம் என்ற எதிர்பார்ப்பு வெற்றி பெறவில்லை.செல்வம் அடைக்கலநாதனுக்குக் கிடைத்த விருப்பு வாக்குகள் மொத்தம் 5,695. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர்கள் இம்முறையும் வெற்றி பெறவில்லை. தென்னிலங்கையில் இரண்டு தடவை ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட ஜே.வி.பி.க்கு வடக்கில் 5 ஆசனங்கள்.ஆனால் தமிழர்களுக்கான ஆயுதப் போராட்டத்தில் உறுப்புகளை இழந்தவர்கள் உட்பட முன்னாள் விடுதலைப்புலிகள் இயக்கத்தவர்கள் வெற்றி பெறவில்லை.சசிகலா எதிர்பார்த்த அனுதாப வாக்குகள் அவருக்குக் கிடைக்கவில்லை.தென்மராட்சியில்,ரவிராஜின் நினைவுகளைவிடவும் அர்ச்சுனாவின் கலகம் அதிக வாக்குகளை வென்றிருக்கின்றது.

அர்ச்சுனாவுக்கு கிடைத்த வெற்றியை வைத்து சமூக வலைத்தளங்களில் யாழ்ப்பாணத்தவர்கள் பரிகசிக்கப்படுகிறார்கள். ஆனால் அந்த வெற்றியை சமூக வலைத்தளங்கள் மற்றும் யூடியுப்கள் உருவாக்கும் புதிய அரசியல் பண்பாட்டுக்கூடாகவே விளங்கிக்கொள்ள வேண்டும். யுடியூப்பர்களின் காலத்தில் தேசத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பில் பொருத்தமான உபாயங்களைக் கண்டுபிடிக்கவேண்டியுள்ளது. அதைவிட முக்கியமாக தமிழ்த்தேசிய அரசியலில் காணப்படும் தலைமைத்துவ வெற்றிடம்தான் அர்ச்சுனாவைப் போன்றவர்களின் வெற்றிகளுக்கு மூலகாரணம்.அந்த வெற்றிடத்திற்குத் தமிழ்த்தேசியக் கட்சிகளே பொறுப்பு.

முடிவாக, தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் தமிழ்த்தேசியக் கட்சிகளும் தமிழ் மக்களும் கற்றுக்கொள்ளவேண்டிய அடிப்படை உண்மைகள் வருமாறு

முதலாவது பேருண்மை.தேசியவாத அரசியல் எனப்படுவது மக்களை ஒரு பெரிய திரளாகக் கூட்டிக்கட்டுவது.தேசத்தைத் திரட்டத் தவறினால்,தென்னிலங்கை மையக் கட்சிகள் வாக்குகளைக் கவர்ந்து சென்று விடும்.

இரண்டாவது பேருண்மை, சமஷ்டியை தேர்தல்மூலம் அடைய முடியாது. தேர்தல்களின் மூலம் மட்டும் தேசத்தைத் திரட்ட முடியாது.

மூன்றாவது பேருண்மை, சமஷ்டியை அடைவதாக இருந்தால் ஈழத் தமிழர்கள் நாட்டுக்கு வெளியே அணிகளையும் கூட்டுகளையும் உருவாக்கவேண்டும். அந்த அணிகளின் மூலம் தீர்வுக்கான பிராந்திய மற்றும் அனைத்துலகச் சூழலைக் கனியச்செய்யவேண்டும். அவ்வாறு உலகத்தைத் திரட்டுவது என்றால் அதற்கு முதல் இங்கு தாயகத்தில் தேசத்தைத் திரட்டவேண்டும். தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட தரப்புகளை ஒரு பெருந்திரளாக்க வேண்டும். தேசத்தைத் திரட்டினால்தான் உலகத்தைத் திரட்டலாம். அவ்வாறு தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டத் தவறினால் தென்னிலங்கையை மையக் கட்சிகள் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தைப் படிப்படியாக அரித்துத் தின்றுவிடும்.

■

# உணர்ந்தினம்

பாகம் 3

○ இராகவன்

அப்ப எங்களுக்குக் குளத்து மீன் பிடிக்கிறதுதான் பொழுதுபோக்காயிருந்தது. ஜாம் போத்திலுக்குள்ளதான் மீனைப் பிடிச்சுவிடுவம். மீனெண்டால் பெரிய மீனெல்லாமில்லை. சரியான குஞ்சுமீன். அதுக்கு என்ன சாப்பாடு வைக்கிறதெண்டுந்தெரியாது. சோத்துப் பருக்கையளத்தான் போடுவம். ரண்டொரு நாளில மீனுகள் செத்துமிதக்கும். வீட்டில சக்கப்பேச்சுவிழும். பிறகு போத்திலோட கொண்டுபோய் வெளியில ஊத்துறதுதான் எங்கட வேலை.

குளக்கரையில மீன் பிடிக்கிறவிடக் கிணத்திலயும் மீன்பிடிச்சிருக்கிறம். அதுக்கெண்டு ஒரு சிஸ்ரமிருக்கு. சைக்கிள் றிம்மொண்டயெடுத்து சுத்திவர ஒரு சீலையால கட்டவேணும். பிறகு மேற்பக்கம் தண்ணியள்ளுற வாளிக்குக் கட்டுற மாதிரிக் கயிறால கட்டவேணும். இப்ப மீன்பிடி உபகரணம்றெடி. அதை எந்தக் கிணத்துக்குள்ள விட்டும் மீன்பிடிக்கலாம். கிணத்தின்ர ஆழத்துக் கேற்றமாதிரிக் கயிறும் நீளமாயிருக்கோணும். அதை அப்பிடியே கொண்டுபோய் வாளி போடுறமாதிரிக் கிணத்துக்குள்ள போட்டு உள்ள இறக்கிப்போட்டு மெதுவா வெளியில இழுக்க தண்ணியெல்லாம் வடிஞ்சிடும். றிம்முக்குக் கீழ கட்டின சீலைக்குள்ள மீனெல்லாம் வந்திருக்கும். பிறகு ஒவ்வொண்டாப்பிடிச்சு ஜாம் போத்திலுக்க விடவேண்டியது தான்.

05

நான், சிவன்,முருகன்,கண்ணன் நாலுபேரும் முதல்ல இந்த மீன் பிடி உபகரணத்தோடை கொம்மடிக்கிணத்துக்குத்தான் போனம். இந்தக் கிணறு தல்லையப்புலம் வீரபத்திரர் பத்திரகாளி கோவிலுக்கு முன்னால் வலப்பக்கமாயிருக்கு. இது கொமிற்றியால கட்டின கிணறு எண்டதால் கொமிற்றிக் கிணறு எண்டு முதல்ல சொல்லியிருப்பினம். பிறகு அது மருவி கொம்மட்டிக் கிணறாக மாறியிருக்கவேணும். இதில நாங்க குளிச்சிருக்கிறம், இப்பவும் இந்தக் கிணறு பாவனையிலயிருக்கு. முந்தியொரு வெட்ட வெளியிலயிருந்த கிணத்துக்கு முன்னால, இப்ப தல்லைச்சனசமூக நிலையமும் அதுக்கடுக்க பெரிய அன்னதானமடமும் கட்டியிருக்கு. சரி கதைக்கு வருவம். நாங்கள் நாலுபேரும் கொம்மட்டிக் கிணத்துக் குள்ள மீன்பிடி உபகரணத்தை இறக்கிப்போட்டுக் கொஞ்சநேரங்கழிச்சு வெளியில இழுத்தம். மீனொண்டும் வரயில்லை. தவளையள் தான் வந்திச்சுது. மனம் வெறுத்துப்போய் என்ன செய்யலாமெண்டு யோசிச்சம். அப்ப முருகன் "கனகராவளவுக்குப் போவம்" எண்டான். ' போடா லூசா! அதுக்குள்ளயும் வெறுந்தவளையள் தானிருக்கும்' எண்டு கண்ணன் குழம்பினான். 'எதுக்கும் ஒருக்காப் போய்ப்பாப்பம்' எண்டு சிவன் சொன்னான். பிறகென்ன அவன் சொன்னால் மறுக்கேலுமே ? நாலுபேரும் அங்கைபோனம். அந்தக் கிணறு கனகராவளவு பரமானந்தப் பிள்ளையார் கோயில் வெளிப்பக்கம் வலதுபுறமா வெளி மண்டபத் தாவாரத்தோடயிருந்தது. இப்ப அந்தக் கிணறு இல்லை. அதைத் தூர்த்துப்போட்டுக் கட்டடம் கட்டியிருக்கு. நாங்கள் எந்த நம்பிக்கையுமில்லாமல்தான் மீன் பிடி உபகரணத்தை உள்ளை விட்டுட்டு 'கனகராவளவுப் பிள்ளையாருக்கு அரோகரா !' எண்டு கத்திக்கொண்டு வெளியில இழுத்தம். என்ன அதிசயம்! பிளக் மொறிஸ், றெட் மொறிஸ், கோல்ட்பிஸ் எண்டு முழுக்கமுழுக்க கலர் மீன்மயம். ' நாங்கள் கொண்டு போனது ஒரேயொரு ஜாம் போத்தல்'. அதுக்குள்ள அவ்வளவு மீனையும் விடேலுமே? அதுக்குள்ள நாங்கள் மீன்பிடிக்கிறதைப் புதினம் பாக்க ஊர்ப்பொடியள் முழுக்கக் குவிஞ்சிட்டாங்கள் .

*(தொடரும்)*

# நினைவுகளில் தமிழறிஞர்:

*(தொடர்ச்சி)*

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க (1)
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச் (18)
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள் (30)
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி (59)

### நல்லை ஆதீனம் வெளியிட்ட முதலாந்திருமுறை

திரு.க. உமாமகேசுவரன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு நல்லை, திருஞானசம்பந்தர் ஆதீனம் திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய தேவாரம் முதலாந்திருமுறையை 1987 ஆம் ஆண்டு நடைபெற்ற திருநெறிய தெய்வீக மாநாட்டில் வெளியிட்டது. மாநாடு 11 தினங்கள் நடைபெற்றது. மாநாட்டின் நிறைவு நாளில் 1987.05.13 அன்று நூல் வெளியீடு செய்யப்பட்டது.

ஆசிரியர் உமாமகேசுவரன் அவர்கள் எழுதிய பதிப்புரையிலிருந்து சில பகுதிகள்:

"யாழ்ப்பாணத்து வண்ணைநகர்ச் சுவாமிநாதபண்டிதர் அவர்கள் பதித்துதவிய தேவாரத் திருமுறை தலவரிசை என்ற அந்த நூலைப் பண் வரிசையாகப் பதித்து வெளியிடவேண்டும் என்ற விருப்பின் விளைவே இப்பதிப்பு. எனவே இது சுவாமிநாத பண்டிதர் அவர்கள் அடங்கன்முறையின் பவளவிழாப்பதிப்புமாம்.

சுவாமிநாத பண்டிதர் பதிப்பின் மூலபாடத்தினை இப்பதிப்பு அடியொற்றினும், ஏனைய பதிப்புக்கள் தரும் பாடபேதங்கள் குறிக்கப்பட்டுள்ளன.

பாடபேதங்களைக் குறிக்க முனைந்த போதுதான் பின்வந்த திருமுறைப் பதிப்புக்கள் எத்துணை தூரம் பண்டிதர் அவர்கள் பதிப்புக்குக் கடன்கட்டுள்ளன என்ற அருமை புலப்பட்டது.

சுருங்கிய வடிவிலான தலக் குறிப்புக்கள், இன்றியமையாப் பிறகுறிப்புக்கள் என்பவற்றுடன் இப்பதிப்பு வெளிவருகிறது. பாடல்கள் சீர்பிரித்துப் பதிக்கப்பட்டுள்ளன."

நல்லை ஆதீனம் வெளியிட்ட முதலாந்திருமுறைப் பதிப்பின் சிறப்பினைக் கண்ணுற்ற தருமை ஆதீன சந்நிதானம் அவர்கள் திரு.க. உமாமகேசுவரனை தருமை ஆதீனத்துக்கு அழைத்து பன்னிரு திருமுறைகளைப் பதிப்பிக்கும் பணியில் துணைப் பதிப்பாசிரியர்களில் ஒருவராக அமர்த்தினார்.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கைவண்ணம்


மாணவர்களே!

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.


உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555



எஸ். கேனுஜா,
தரம் - 6E
யா / வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை




ஜதுர்சிகா
தரம் 7
J/நீர்வேலி ஆர்.சி.ரி.மகா வித்தியாலயம்




ஜ. சைந்தவி,
தரம் - 10A,
யா / சாவகச்சேரி மகளிர் கல்லூரி





A.வர்ஷா
தரம் - 10
J/V.C.L.C



ஆர்.ஆதனன்
தரம் - 2D
யா/ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்



தர்வின்
தரம் - 8H
யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி





தி.பிரியந்தகி
தரம் - 9
யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி



எஸ்.கேனுஜா
தரம் - 6E
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை



கு. நிருஜிகன்
தரம் - 09
கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்




சு.பிரதீபா
தரம் - 12
யா/இந்து மகளிர் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org